விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 20 திங்கட்கிழமை (06.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## பிரபாகரனின் ஆட்சியை அழித்தது இந்தியாவே!

### வைகோ சீற்றம்



(சென்னை)
விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அன்று ஈழத்தில் நீதியான அரசை நடத்தியதாகவும் அதனை இந்திய அரசாங்கமே அழித்ததாகவும் 23

## வைகோவுக்கு பெருமை பிரபாகரன் மாலையே!

### சத்தியராஜ் நெகிழ்ச்சி



(சென்னை)
விடுதலைப்புலிகளின் தலைவர் 2 சயனைட் குப்பிகளை மாலையாக போட்டிருந்தார். 02

## - உள்ளூராட்சி சபைத் தேர்தல் -


# வட - கிழக்கில் பொது அணி களம் இறங்கும் வாய்ப்பு

## பொது அமைப்புகள் புது வியூகம்

(யாழ்ப்பாணம்)
2018 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொது அணி ஒன்றை களமிறக்குவதற்கு பொது அமைப்புகள் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (23ஆம் பக்கம் பார்க்க)

### விசேட அதிரடிப்படை பாதுகாப்புடன் நடந்த

## தமிழரசு கட்சி முல்லைத்தீவு கிளைக்குழுக் கூட்டத்தில் மோதல்



(முல்லைத்தீவு)
இலங்கை தமிழரசு கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட கிளைக் குழு கூட்டம் முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் நேற்றையதினம் நடைபெற்றது.
கரைதுறைப்பற்று பிரதேச மூலக் கிளையின் நிர்வாக தெரிவுக்கூட்டம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச மூலகிளைக்குழு கூட்டம் என்பன நேற்றையதினம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
இதனடிப்படையில் முன்னதாக கரை துறைப்பற்று மூலக்கிளையின் நிர்வாக தெரிவுக்கூட்டம் காலை பத்து முப்பது மணியளவில் 23

## 'ஏக்கிய'வை எல்லோரும் ஏற்றுள்ளார்கள் - ரணில்



(கொழும்பு)
நாட்டின் ஆட்சிமுறைமையினை விளக்குவதற்கான சரியான சிங்களப் பதம் 'ஏக்கிய' என எல்லோரும் ஏற்றுள்ளார்கள்.
அத்துடன் இவ்வாறு வரும் புதிய அரசியலமைப்பை வெற்றி பெற வைக்கவேண்டியது 23

## பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு முகவர்களே காரணமாம்

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)
எரிபொருள்களின் விலைகள் குறையப்போவதாக தெரிவிக்கப்படும் தகவல்களை மையப்படுத்தி தம்மிடம் கையிருப்பில் உள்ள எரிபொருள்களை விற்பனை செய்து கொள்ள முன்னெடுக்கும் உத்தியே எரிபொருள் தட்டுப்பாடுக்கான பரப்புரையாகும்.
இவ்வாறு பெற்றோலிய வளங்கள் பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத் 04

## முல்லை. பள்ளியில் திருடர் கைவரிசை

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள பிரதான பள்ளிவாசலில் நேற்று முன்தினம் நள்ளிரவு திருட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது
நள்ளிரவு குறித்த பள்ளிவாசலுக்குள் புகுந்த திருடர்கள் பள்ளிவாசலில் காணப்பட்ட உண்டியல் ஒன்றினை பணத்துடன் தூக்கி சென்றுள்ளதோடு பள்ளி 24

### உள்ளூராட்சி தேர்தல் – 2018

## தமிழர் விடுதலைக் கூட்டணி சகல வட்டாரங்களிலும் போட்டி

### ஆனந்தசங்கரி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
2018இல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சகல மன்றங்களுக்கும்,தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்பாளர்களை நியமிக்கும். 23

## அமெரிக்க துணைச் செயலர் இன்று இலங்கை வருகிறார்



(கொழும்பு)
இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் தோமஸ் செனான் இன்று இலங்கை 04

## பதில் சட்டமா அதிபராக டி லிவேரா நியமனம்



(கொழும்பு)
சிரேஷ்ட மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் தப்புல டி லிவேரா பதில் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.
சட்டமா அதிபர் ஜனாதிபதி 23

## பிரமிட் - ஆட்சேர்க்கும் நிகழ்வால் சாவகச்சேரியில் பெரும் பதற்றம்

(சாவகச்சேரி)
தென்மராட்சியில் பிரமிட் வியாபாரத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பிரமிட் வியாபாரம் தொடர்பாக் விளக்கமளிக்கும் மண்டபத்தை முற்றுகையிட்டதால் தென்மராட்சியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.
சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள மண்டபம் ஒன்றில் வெளிமாவட்டங்களில் இருந்து பேருந்துகளில் ஏற்றிவரப்பட்ட பொதுமக்களுக்கு பிரமிட் வியாபாரம் தொடர்பாக ஆட்சேர்க்கும் நிகழ்வு தனியார் நிறுவனம் ஒன்றினால் நேற்றுக் 23

## இடைக்கால அறிக்கை குறித்து இணையவழி கருத்துக்கணிப்பு

### நடத்திப்பார்க்க அரசு முடிவு

(கொழும்பு)
புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான நாடாளுமன்ற வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களை இணையவழியில் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.
இதற்காக முகநூல் மற்றும் சில இணையத்தளங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக பிரதமர் செயலக வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வைகோவுக்கு...

இவர் போட்டு இருந்த இரு சயனைட் மாலைகளில் ஒரு மாலையை வைகோவுக்கு போட்டார். இதை விட வைகோவுக்கு வேறு என்ன வேண்டும்? இந்த மாலையை விட வைகோவுக்கு வேறு எந்த மாலை வேண்டும் என சத்தியராஜ் குறிப்பிட்டுள்ளார்.

ஈழம் 87 என்ற புத்தக வெளியீட்டு விழா சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார். இவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பயத்தை விடு, இல்லையென்றால் இலட்சியத்தை விடு" என்பது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கூற்று எனக் குறிப்பிட்ட இந்திய திரைப்பட நடிகர் சத்தியராஜ், வைகோ, பிரபாகரனை சந்தித்த கதைகளை கூறியதும் தாம் கேட்டு பிரம்மித்ததாக தெரிவித்தார். (மு)


**நோயாளர் பராமரிப்பு சேவை**

உங்கள் வீடுகளுக்கே வந்து நோயாளர்கள், முதியோர்கள் பராமரிக்கப்படுவர்.

**அழையுங்கள்:-0778730129**

(1230)

**வாகனம் விற்பனைக்கு**


நல்ல நிலையில் உள்ள TATA-207 DI TR-XXXX இலக்கமுடைய வாகனம் விற்பனைக்குண்டு.

**தொடர்பு:-0772230925**

(கி-291)


# துயர் பகிர்கின்றோம்

## அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம்



கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தின் கௌரவ செயலாளராக கடமையாற்றி பல்வேறு அரிய பணிகளைச் செய்த அமரர் தி.இராசநாயகம் அவர்களின் 02.11.2017 அன்றைய தின மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் துயரில் பங்குபெறும்
**கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கம்**
**கிளிநொச்சி.**

(கி-294)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்-29.03.1937
மறைவு-05.11.2017

எமது கலாசாலையின் கணிதத்துறை விரிவுரையாளர் திரு.த.தவசேகர் அவர்களின் அன்புத் தந்தையார்

## இராசையா தளையசிங்கம்

**(வருணன்-அச்சுவேலி)**

அவர்கள் மீளாத்துயில் எய்தியமையையிட்டு துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

விரிவுரையாளர் கழகம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

(கி-296)

# துயர் பகிர்கின்றோம்

## அமரர்

## திருநாவுக்கரசு இராசநாயகம்



காந்தி சிறுவர் இல்லமும் பயிற்சி நிலையத்தினதும் முன்னாள் தலைவரும் தற்போதைய காப்பாளருமாக இருந்து பல்வேறு வழிகளிலும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களையும் வழங்கிய அமரர் தி.இராசநாயகம் அவர்களின் 02.11.2017 அன்றைய தின மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் துயரில் பங்குபெறும்
காந்தி சிறுவர் இல்லமும் பயிற்சி நிலையமும்
உருத்திரபுரம், கிளிநொச்சி

(கி-293)

# வேலணை விடிவெள்ளி அமைப்பின்

# கண்ணீர் அஞ்சலி

விடிவெள்ளி அமைப்பு



உயர்திரு

## திருநாவுக்கரசு இராசநாயகம்

கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும், கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லப் பணிப்பாளரும், சமூக சேவையாளருமாகிய தி.இராசநாயகம் ஐயா அவர்களின் இழப்பினால் துயருற்று இருக்கும் அவர் தம் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் மகாதேவா சுவாமிகள் இல்ல பணியாளர்கள், சிறுவர்களுடைய துயரில் நாமும் பங்கெடுப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**விடிவெள்ளி அமைப்பு,**
**வேலணை**

(கி-290)

# துயர் பகிர்கின்றோம்

## அமரர்

## திருநாவுக்கரசு இராசநாயகம்



எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் பக்கபலமாக இருந்து செயற்பட்டவரும் 300க்கு மேற்பட்ட மாணவர்களின் பாதுகாவலராக விளங்கிய வரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவருமாகிய அமரர் தி.இராசநாயகம் அவர்களின் 02.11.2017 அன்றைய தின மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் இல்லக்குழந்தைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் துயரில் பங்குபெறும்
இந்துக்கல்லூரி சமூகத்தினர்
கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளிநொச்சி.

(கி-292)

# கடற்படையின் அராஜகத்தால் வீட்டுத்திட்டம் பறிபோகும் நிலை

## காரைநகர் மடத்துவளவு மக்கள் குற்றச்சாட்டு

*(யாழ்ப்பாணம்)*

**கடற்படையின் அராஜகத்தால் காரைநகர் மடத்துவளவு மாதிரி கிராமத்துக்கு வரவிருக்கும் வீட்டுத்திட்டம் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்ள கடற்படை எடுக்கும் முயற்சிகளை தடுத்து நிறுத்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் மற்றும் உரிய அதிகாரிகள் கடற்படைக்கு அழுத்தம் கொடுத்து பொதுமக்களின் காணியை மீட்டு தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

காரைநகர் மடத்து வளவு பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாதிரிக் கிராமம் அமைந்துள்ளது. இக் கிராமத்தில் போருக்கு முன்னரான காலப் பகுதியில் 44 வீடுகள் அமைக்கப்பட்டு மக்கள் வாழ்ந்து வந்தனர். போரின் காரணமாக அவர்களுடைய வீடுகள் அழிவடைந்து காணப்படுவதுடன் தற்போது அப் பகுதியை கடற்படையினர் தம்வசம் வைத்துள்ளனர். அங்கு வசித்து வந்த மக்கள் வேறு இடங்களில் ஆங்காங்கே குடிசைகளில் தங்கி வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த மாதிரிக் கிராமத்தை அண்டிய 126 ஏக்கர் காணி தற்போது கடற்படையினர் வசம் உள்ளது. இதில் 76 ஏக்கர் நிலப்பகுதியை கடற்படை ஏற்கனவே சுவீகரித்துள்ளது. ஏனைய பகுதிகளை எந்த காரணமும் இன்றி தற்போதும் தம்வசம் வைத்துள்ளனர். அந்த பகுதியில் சுமார் 6 ஏக்கர் காணியே மேற்குறித்த மடத்து வளவு மாதிரி கிராமத்துக்கு சொந்தமானதாக உள்ளது. இந்த நிலையில் இந்த வருடம். இந்திய அரசின் நிதி உதவியுடன் மாவட்டத் துக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 24 வீடுகள் வழங்கும் திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு கிடைத்துள்ளது. அதில் யாழ். மாவட்டத்துக்குரிய 24 வீடுகளை மடத்து வளவு மாதிரி கிராமத்துக்கு வழங்குவதற்காக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர். பொதுமக்களும் தமது கிராமத்துக்கு செல்வதற்கு ஆயத்தமாக உள்ளனர்.

ஆனால் குறித்த பகுதியை இதுவரை கடற்படையினர் பொது மக்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்காமல், முள்வேலி அமைத்து தம்வசம் வைத்துள்ளனர்.

எதிர்வரும் சில நாட்களுக்குள் இந்த வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை என்றால் குறித்த திட்டம் ஏனைய பகுதிக்கு கொடுக்க வேண்டிய நிலை உருவாகும்.

இது தொடர்பில் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் குறித்த கடற்படைக்கு அறிவித்துள்ளதாகவும் ஆனால் கடற்படை சாதகமான பதிலை வழங்கவில்லை என்றும் அதனால் தான் வீட்டுத்திட்ட வேலை தாமதமடைகிறது என பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேலும் தாம் தமது கிராமங்களை விட்டு அகதி வாழ்க்கை வாழ்ந்து வருகிறோம். அடிப்படை வசதிகளையும் எமக்கு உரிய முறையில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. கைவசம் எமக்கு பல தொழிற்றுறை இருந்தும் எமக்கென சொந்தமான வீடுகள் இல்லாத காரணத்தால், அதை சரிவர மேற்கொள்ள முடியவில்லை என்றும் அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். அத்துடன் குறித்த பகுதியை கடற்படை தம்வசம் வைத்திருப்பதன் நோக்கம் சிங்கள மீனவ குடும்பங்களை அப்பகுதியில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் இரகசியமாக மேற்கொள்ளப்படுகிறதா என்ற சந்தேகம் தம் மத்தியில் தோன்றியுள்ளதாகவும் தெரிவித்தனர். இவ் விடயம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் கடற்படைக்கு உடனடியாக அழுத்தம் கொடுத்து தமது காணியை மீட்டுத்தருவதுடன். வீட்டுத்திட்டத்தையும் பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர். (இ-9)

## கண்டியில் கனேடிய உயர்ஸ்தானிகர்



இலங்கைக்கான கனடாவின் உயர்ஸ்தானிகர் டேவிட் மெகினன் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். கண்டிக்கு விஜயம் மேற்கொண்ட கனேடிய உயர்ஸ்தானிகர் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவை பல்லேகலையிலுள்ள அலுவலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினார். (இ-7)

## கோப் குழுவின் தலைவரை மாற்றுவதற்கு அரசுக்குள் சதி

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற விசாரணைக்குழுவின் (கோப்) தலைவராகவுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் சுனில் ஹந்துன்னெத்திக்குப் பதிலாக அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவரை நியமிக்க சிரேஷ்ட அமைச்சர்களிடையே கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அரசாங்க உள்ளக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்காக வரவு- செலவுத் திட்டத்தின் பின்னர் பாராளுமன்ற கூட்டத் தொடர்களை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்ற கூட்டத் தொடர்கள் ஒத்தி வைக்கப் பட்டதன் பின்னர் மீண்டும் கூட்டத்தை ஆரம்பிக்கும் போது சபைகள் அனைத்துக்கும் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். இதன்படி கோப் அமைப்பினது தலைவரையும் நீக்கி விட்டு புதிய ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாகவும் அரசாங்க உள்ளக வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளன. (இ-7)

## அரிசியின் விலை மேலும் உயர்வடையும் சாத்தியம்



(கொழும்பு)

அரிசியின் விலை மேலும் உயர்வடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஒரு கிலோ கிராம் அரிசி 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அரிசியின் விலை மேலும் உயர்வடையக் கூடும் என அகில இலங்கை சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் பந்துல ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

உலகில் நிலவி வரும் அரிசிக்கான தட்டுப்பாடே இவ்வாறு விலை உயர்வதற்கான காரணம் என தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கும் வடகொரியாவிற்கும் இடையில் போர் மூளக்கூடும் என செய்யப்படும் பிரசாரங்களும் அரிசிக்கான தட்டுப்பாட்டை வலுப்பெறச் செய்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறைந்த விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என அவர் தெரிவித்தார். (இ-7)

## நிதிமோசடி பிரிவினரால் தேடப்படும் நபர் அமைச்சர் வஜிர அபேவர்த்தன வீட்டில்

(கொழும்பு)

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரால் கைது செய்யப் படுவதற்காக தேடப்படும் காமினி செனரத்தை அமைச்சர் வஜிர அபேவர்த்தன தனது வீட்டில் ஒளித்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணியாட்தொகுதி பிரதானியான காமினி செனரத் இன்னும் சிலருடன் இணைந்து கிரண்ட் ஹயாட் நிர்மாணத்தில் பெரும் தொகைப் பணத்தை மோசடி செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதன் காரணமாக கடந்த மாதம் 30ஆம் திகதி காமினி செனரத், குடாபாலகே, நீல் ஹபவின்ன ஆகியோரை பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினர் விசாரணைக்காக அழைத்திருந்தனர். அன்றைய தினம் அவர்கள் கைது செய்யப்படலாம் என்று எதிர் பார்க்கப்பட்டது.

இந்நிலையில் அதற்கு மறுதினம் சட்டத்தரணி ஒருவர் ஊடாக பொலிஸ் நிதி மோசடிப் பிரிவுக்கு வருகை தருவதாக காமினி செனரத் உள்ளிட்டவர்கள் அறிவித்திருந்தனர்.

எனினும் அவ்வாறு வருகை தராத நிலையில் பொலிஸார் அவர்களைக் கைது செய்வதற்காக காமினி செனரத்தின் வீடு தேடிச் சென்றிருந்தனர்.


அதன்போது காமினி செனரத் தனது வீட்டிலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாகி விட்டார்.

அவர் எங்கிருக்கின்றார் என்பதை பொலிஸாரினால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தனது வீட்டில் காமினி செனரத்தை மறைத்து வைத்திருப்பதாக பரபரப்பான தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கும் அமைச்சர் வஜிர, கடந்த ஆட்சியில் நடைபெற்ற மோசடிகளுடன் தொடர்புடையவர்களை பாதுகாக்கும் நோக்கில் செயற்படுவதாக பல தடவைகள் குற்றம் சாட்டப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மங்களவின் கன்னி பட்ஜெட் 9ஆம் திகதி சபைக்கு வரும்



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி பிற்பகல் பாராளுமன்றத்தில் முன்வைக்கப் படவுள்ளது.

இது நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் முதலாவது வரவு செலவுத்திட்டம் ஆகும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முன்வைக்கப்படும் அடுத்த வருடத்துக்கான மொத்த செலவுகள் 3982 பில்லியன் ரூபாய் என மதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்துக்கான (2018) அரசாங்கத்தின் மொத்தச் செலவுகள் இவ் வருடத்துக்காக (2017) ஒதுக்கப்பட்ட கடந்த வரவு-செலவுத் திட்டத்தின் செலவுகளுடன் ஒப்பிடும் போது 355 பில்லியன் ரூபாய் அதிகமாகும் எனவும் கூறப்படுகின்றது.

இம்முறையும் கடந்த வருடத்தைப் போலவே அதிக நிதி பாதுகாப்புக்கே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

வரவு - செலவுத் திட்டம் சபையில் முன்வைக்கப்படவுள்ள 9 ஆம் திகதி முதல் பாராளுமன்ற வளாகத்தைச் சுற்றி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி முன்வைக்கப்பட்டதன் பின்னர் மறுநாள் 10 ஆம் திகதி முதல் டிசெம்பர் 10 ஆம் திகதி வரையில் ஒரு மாத காலத்துக்கு வரவு செலவுத்திட்ட விவாதம் நடைபெறவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)

## அமெரிக்க துணைச்...

வருகின்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் அவர் விஷேட கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார்.

அதேபோன்று எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பையும் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

மேலும் இன்று திங்கட்கிழமை மாலை 7.30 மணிக்கு வெளிவிவகார அமைச்சில் கூட்டு ஊடக சந்திப்பிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலரின் இலங்கை விஜயத்தின்போது அரச மற்றும் எதிர் கட்சியுடனான சந்திப்புகளின்போது ஜெனிவா தீர்மானத்தின் முன்னேற்றங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட உள்ளது.

குறிப்பாக நல்லாட்சி அரசாங்கத்தின் உத்தேச புதிய அரசியலமைப்பு விவகாரம் குறித்து முக்கிய விடயங்களை கேட்டறியவுள்ளார். உள்நாட்டில் பல தரப்பட்ட எதிர்ப்புகளுக்கு மத்தியில் புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடுத்த கட்ட நகர்வு குறித்து அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணை செயலர் அரச தரப்பினரிடம் கேட்டறிவாரென எதிர்பார்க்கப்படுகின்றது. (மு)

## பெற்றோல் தட்டுப்...

துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

"எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு முதலில் கப்பலில் வந்த எரிபொருள் தரமற்றது என்ற காரணம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், எரிபொருள் விலை குறையப் போவதாகவும் ஒரு செய்தி காணப்படுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு தங்களிடமுள்ள அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள்களை விநியோகித்து முடித்துக் கொள்ள முன்னெடுக்கும் ஒரு நடவடிக்கையே இந்த பொய்யான பரப்புரையாகும்" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கான எரிபொருள் கப்பல் நாளை செவ்வாய்க்கிழமையே கொழும்பை வந்தடையும் என்றும் புதன்கிழமைவரை மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள்கள் விநியோகமே இடம்பெறும் என்றும் கூட்டுத்தாபனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தியன் ஒயில் கம்பனி தன்னிடமுள்ள 30 ஆயிரம் மெற்றிக் தொன பெற்றோலை பதுக்கியமை பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு காரணம் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்கள் குற்றம் சாட்டியுள்ளன. (மு)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு. **விஜயரத்தினம் கனகராசா** (கனகவாரிதி)

(ஓய்வுபெற்ற ஆசிரியர் SLTS I B.A (Cey) Dip.in Ed, m.phil.Ed அறிவிப்பாளர்: வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாளர் (லங்காசிறி, ஓம் ரீவி, இலங்கை வானொலி, I.B.C, B.B.C, ஆதவன் தொலைக்காட்சி, சைவ சமய பிரசாரகர், சமூக சேவையாளர்)

26.09.2017 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி உயர்திரு. ஜெ.கஜநிதிபாலன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகசத்தியப்பிரமாணம்செய்துள்ளமையை பாராட்டி வாழ்த்துவதுடன் அவரின் சமூகப் பணி தொடர்ந்திட எல்லாம் வல்ல ஸ்ரீஞான வைரவப் பெருமானின் அருளை வேண்டி நிற்கிறோம்.

**ந.தர்மலிங்கம் குடும்பம்**
அரியாலை.

(1229)

## துயர் பகிர்கின்றோம்



மண்ணில்
01 - 05 - 1946

விண்ணில்
02 - 11 - 2017

அமரர் உயர்திரு. **திருநாவுக்கரசு இராசநாயகம்**

நாலாம் கட்டை, பூநகரியைப் பிறப்பிடமாகவும் இல.12, சொர்ணவடலி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரும் கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவரும் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் வடமாகாண உள்ளூராட்சி பொதுநிருவாக அமைச்சின் முன்னாள் செயலாளரும் பொதுநிருவாக அமைச்சின் பிரதிப் பிரதம செயலாளரும் உருத்திரபுரீசுவரர் ஆலயத்தின் முன்னாள் தலைவரும் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் முன்னாள் தலைவரும் காந்தி நிலையச் சிறுவர் இல்லத்தின் முன்னாள் தலைவரும் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தின் முன்னாள் தலைவருமான அமரர் உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் ஐயா அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரடைகின்றோம்.

**சிவரு காட்வெயார்,**
**கரடிப்போக்கு, கிளிநொச்சி**


(C-302)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயப் பணிகளுக்கு பேருதவி புரிந்த

உயர்திரு.

**திருநாவுக்கரசு இராசநாயகம்**



அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்மா கூத்தபிரானின் திருவடிகளில் பேரின்பப் பெருவாழ்வு பெற அவன் தாள் பணிகின்றோம்.

**தில்லேஸ்வரம் சிவன் ஆலயம்,**
**மண்டைதீவு.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி கலாநிதி **பா.தனபாலன்** அவர்கள் "தேசிய இரத்தின தீப" விருது பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வடக்கு ஊடகக் கல்விக் கல்லூரி, மலையக கலை கலாசார சங்க ஏற்பாட்டில் கடந்த 22.10.2017 அன்று வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் எமது கல்லூரி உபபீடாதிபதி கலாநிதி பா.தனபாலன் அவர்களுக்கு "தேசிய இரத்தின தீப" விருது வழங்கப்பட்டமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்**

(C-297)


## மரண அறிவித்தல்

**இராமசாமி நாராயணசாமி**
**(மெக்கானிக்)**

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வள்ளிபுனம் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி நாராயணசாமி கடந்த 04.11.2017 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (07.11.2017) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வள்ளிபுனம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-298)



தோற்றம் 16.12.1943 — மறைவு 04.11.2017

வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.

தகவல்:- குடும்பத்தினர் 077 667 5367

# 50 பொன்விழா போற்றுதும்!



## லயன் வ. ஸ்ரீபிரகாஸ் அவர்கள்

(உபதலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்/
உரிமையாளர், குகன் ஸ்ரூடியோ- சாவகச்சேரி)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் ஊடாகவும்
கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஊடாகவும்
தனிப்பட்ட ரீதியிலும் கல்வி, மருத்துவம், நலிவுற்றோர்
உயர்வுக்கு அரும்பெரும் பணிகளை ஆற்றிவரும்
அன்பு நண்பர் வ.ஸ்ரீபிரகாஸ் அவர்கள்
இன்று 'பொன்விழா' காண்கிறார். அவரது சேவைகள்
மேலும் தொடரவும் சமூகப் பணிகள் மிளிரவும்
வாழ்த்துகிறோம். குடும்பம், சுற்றம் என்பன சூழ
எல்லா நலன்களையும் பெற்று
நூற்றாண்டு வாழ இறையாசி வேண்டுகிறோம்!

வாழ்க வளமுடன்

*Congratulations*

தென்மராட்சி.
06.11.2017

நண்பர் குழாம்



(சி-285)



## முழு வீச்சுடனான சகல வங்கிச் செயற்பாடுகளுடனும்... மக்கள் வங்கி, கொடிகாமம் கிளையின்

# கோலாகல திறப்பு விழா

**2017.11.06**

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

### நிதி சார் வசதிகள்

தொழில் முயற்சியாளர்கள் !
வர்த்தகத் துறையினர் !
அரச, தனியார் ஊழியர்கள் !
மாணவர்கள் !
என அனைவருக்கும்...

தங்க நகை அடகுச் சேவை
சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கடன்கள்
வியாபாரத்துக்கான வங்கி பிணைகள் (Letter of Guarantee)
நுண் நிதியியல் கடன்கள்
குறுங்கால மற்றும் சுழற்சி முறை கடன்கள்
மேலதிக பற்று வசதி
ஏற்றுமதி இறக்குமதி கடன்கள்
சகல வர்த்தகக் கடன்களும்
இறக்குமதிக்கான நாணயக் கடித வசதிகள் (Letter of Credit)
மீன்பிடி, விவசாயம், சுற்றுலாத் துறை கடன்கள்.
வீடமைப்புக் கடன்கள்
உயர் கல்விக் கடன்கள்
நுகர்ச்சித் தேவைக் கடன்கள்

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளரை நாடவும்
தொலை பேசி : 021 2050530, 021 2050531
*நிபந்தனைகளுக்குட்பட்டது.

### Digital Banking டிஜிற்றல் வங்கியியல்

அதி நவீன
தொழில் நுட்பத்துடன்!

Green Banking — காகிதங்களற்ற வங்கிச் சேவையின் ஆரம்பம் — Green BANKING — YES

Internet Banking — இணைய வழி வங்கிச் சேவை உலகின் எந்த மூலையில் இருந்தாலும் உங்களது சகல கணக்குகளையும் இணையத்தினூடாக வழிநடத்தலாம்.

Mobile Banking — கையடக்கத் தொலைபேசி மூலம் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் விரல் நுனியில் மக்கள் வங்கி

Debit & Credit Cards — அதிகூடிய அனுகூலங்களுடன் டெபிட் மற்றும் கிறடிற் அட்டைகள்

www.peoplesbank.lk
www.facebook.com/peoples.bank

எமது கொடிகாமம் கிளை வாரத்தில்
06 நாட்கள் திறந்திருக்கும்

திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 8.30 மணி - பி.ப. 4.00 மணி வரை

சனிக் கிழமைகளில்
காலை 8.30 மணி - பி.ப. 1.00 மணி வரை

மிகச்சிறந்த, கனிவான
சேவையைப் பெற்றுக்கொள்ள என்றும்
மக்கள் வங்கியுடன் இணைந்திருங்கள்.

**24 மணி நேர ATM வசதிகள்**

பிரதான முகவர்
WESTERN UNION WU
*moving money for better*

### சேமிப்பு வைப்புக்கள்

கவர்ச்சிகரமான வட்டி வீதத்துடன்...

yes
relax
ஜனஜய
ISA
நடைமுறைக் கணக்கு CURRENT ACCOUNT
நிலையான வைப்புக்கள்
வெளிநாட்டு நாணயக் கணக்கு
அரச வங்கியின் பாதுகாப்பு

PEOPLE'S BANK
www.peoplesbank.lk

C-278

# வைத்திய நிபுணர் மலரவன் வடக்கு மக்களுக்காக சவாலான நிலையிலும் திறம்பட சேவையாற்றியவர்

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டு

வைத்திய நிபுணர் மலரவன் கடந்த 5 வருடங்களாக வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றார். இக்காலப்பகுதியில் யாழ்.போதனா வைத்தியசாலையில் 10955 கற்றாக் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார். இது தவிரவும் கண்ணோடு சம்பந்தப்பட்ட பல்வேறு சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளார்.

காலை 8 மணிக்கு முன்னரே கடமைக்கு வரும் வைத்திய நிபுணர் மலரவன், சத்திர சிகிச்சை நாட்களில் மதிய நேரஉணவை ஒருபோதும் எடுத்தது இல்லை. சில நாட்களில் சத்திர சிகிச்சை இரவு நேரம் வரை நீடிக்கும்.

இவர் மேற்கொண்ட கற்றாக் சத்திர சிகிச்சைகள் மிகவும் சவாலானவை. இவற்றில் 1378 கற்றாக் சத்திர சிகிச்சைகளை பொது மயக்க மருந்து வழங்கி செய்துள்ளார். இது தவிரவும் பல்வேறு நோய்களுடன் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் ஏனைய வைத்திய நிபுணர்களின் சிகிச்சையைச் சரி செய்து கண் சத்திர சிகிச்சை செய்துள்ளார் என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர்டாக்டர்சத்தியமூர்த்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகரித்துவரும் வைத்திய தேவைகளை சமாளிப்பதற்காக பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. நாளொன்றில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நிறுவனம் மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்தது. 24மணி நேரமும் இயங்கும் போதனா வைத்தியசாலை போன்ற சேவை நிறுவனங்கள் மிகவும் கடமையுணர்வும் அர்ப்பணிப்பும் உள்ளவர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. முறையற்ற விமர்சனங்கள் இங்கு கடமை புரிபவர்களை மோசமாகப் புண்படுத்துகின்றது.

இதனைத் தொடர்ந்து செய்வதால் இப்பகுதியில் கடமையாற்றுவதற்கு வைத்தியர்களும் ஏனையவர்களும் முன் வரமாட்டார்கள். இங்கே தற்போது கடமையாற்றுபவர்கள் வேறுபிரதேசங்களுக்கு அல்லது மேலைத்தேய நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு அதிகமாகும்.

இந்நிலைமை தொடர்ந்தால் பல்வேறு மட்ட உத்தியோகத்தர்களின் பற்றாக் குறையுடன் இயங்கும் வைத்தியசேவை மேலும் பாதிப்படையும். இது தவிர மக்கள் மத்தியில் தவறான எண்ணங்களைப் புகுத்தி முரண்பாடான நோயாளர் சேவையை உருவாக்கும் அபாயமும் காணப்படுகிறது.

அண்மைக் காலங்களில் சமூக வலைத்தளங்கள் மற்றும் ஒரு சில ஊடகங்களில் ஊடக தர்மத்திற்கு அப்பால் வைத்திய சேவை விமர்சிக்கப்படுகின்றமையானது மிகவும் கவலைக்குரியது. ஒருவருக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டு விட்டால் உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து பரிகாரத்தை தேடமுடியும் அல்லது உரிய சேவை கிடைக்கா விட்டால் முறையிட பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. குறிப்பாக பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களை நாடி தங்கள் பிரச்சினைகளை கூறமுடியும்.

அரச வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளை கட்டுப்படுத்த முடியாது. இந்த பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருந்தும் சில சமயம் வெளிநாடுகளில் இருந்தும் வருபவர்களுக்கு கூட சிகிச்சை அளிக்கின்றோம். பல்வேறு விடுதிகளிலும் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அநேகமான நேரங்களில் தங்களுடைய வேலையின் அளவுக்கு அப்பால் கடமையாற்ற வேண்டியுள்ளது. இது பலருக்கு நன்றாகத்தெரியும். இவை சரியான முறையில் வெளியில் கொண்டு வரப்படுவதில்லை.



ஆனால் சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற குறைபாட்டை பெரிதாக்கி பொதுமக்கள் ஏளனமாக பார்க்கக் கூடிய வகையில் விமர்சிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எப்போதும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

தற்போது வெளிவருகின்ற செய்திகளும் விமர்சனங்களும் அநேகமான உத்தியோகத்தர்களை புண்படுத்துவதோடு அவர்களின் கடமைகளைச் செய்ய தடுக்கும் அபாயமும் காணப்படுகிறது. உதாரணமாக சில வைத்தியர்கள் சில விசேட சிகிச்சைகளை செய்ய தயங்குவார்கள். இது இப்பகுதி வாழ் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் நல்ல சிகிச்சையை வழங்க வேண்டும் என எதிர்பார்ப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் எம்மால் மேலைத்தேய நாடுகள் போன்ற வசதிகளைக் கொண்ட சிகிச்சையை வழங்க முடியாதுள்ளது. ஆனால் தரமான பாதுகாப்பான சிகிச்சையை எப்போதும் வழங்குவதில் நாம் அவதானமாக இருக்கின்றோம். இதை இங்குள்ளவர்களும் உணர வேண்டும்.

அண்மையில் கண் சத்திரசிகிச்சை நிபுணர் மலரவன் பற்றி ஒரு சிலர் நெறிமுறைகளைக் கடந்து செய்திகளை வெளிட்டனர். இது அவரை மாத்திரம் அல்ல ஏனைய வைத்தியர்களையும் கடுமையாக புண்படுத்தி விட்டது.

வைத்திய நிபுணர் மலரவன் கண் சிகிச்சை கிளினிக் மற்றும் கண் சத்திர சிகிச்சை விடுதியின் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டுபவர். வைத்தியசாலை நிர்வாகத்தோடும் தொடர்பு கொண்டு கண் சிகிச்சை வசதிக்காக பாடுபட்டவர். அவர் சிகிச்சை பெறும் அனைவரிடமும் அதிக அக்கறை கொண்டவர்.

விடுதியில் அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் கிளினிக்கிற்கு வரும் எல்லா நோயாளிகளையும் மிகுந்த அவதானத்துடன் பார்வையிடுவார். எப்போதும் அவர்களுக்கு கவனமாக சிகிச்சை அளிப்பார்.

வடமாகாணத்தில் ஏனைய பொது வைத்தியசாலைகளில் கண் சத்திரசிகிச்சை நிபுணர்கள் நிரந்தரமாகக்கடமையாற்றுவதில்லை. ஆகவே அம்மாவட்டங்களுடைய கற்றாக் நோயாளிகளும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கே சிகிச்சை பெற வருகின்றார்கள். அதற்காக விசேட சத்திர சிகிச்சை நாட்களை அறிவித்து அவர்களுக்கு கண் சத்திர சிகிச்சை செய்திருக்கின்றார்.

இது மாத்திரமல்லாமல் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு வருபவர்களுக்கு போதியளவு சிகிச்சையை வழங்கி வருகின்றார்.

அண்மையில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை செய்யப்பட்டவர்கள் கண்ணில் ஏற்பட்ட தொற்றுக் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கு எமது வைத்தியசாலையில் வழங்கப்படவேண்டிய அனைத்துவித சிகிச்சைகளையும் வழங்கி வருகின்றோம். எமது வைத்தியசாலையில் இவ்வாறான தொற்று கடந்த காலங்களில் ஏற்படவில்லை. இருப்பினும் எதிர்வரும் காலங்களில் மிகவும் அவதானமாக இருக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம்.

மருத்துவ உலகைப்பொறுத்தவரையில் இவ்வாறான திடீர் சம்பவங்கள் சவாலானவையாக இருந்து வருகின்றன.

இவ்வாறான திடீர் சம்பவங்கள் விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டு தடுக்கப்பட வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய பரிகாரம் வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பது பொருத்தமாகும். மாறாக தனிப்பட்டவர்கள் மீது பல்வேறு அவதூறுகளையும் குற்றங்களையும் சுமத்துவதை உடனடியாக நிறுத்திக் கொள்ளவேண்டும்.

வைத்திய நிபுணரான மலரவன் மீது வெளிநாடு ஒன்றில்வசிக்கும்இருவர்காணொலி மூலமாக அவதூறு காட்சியை வெளியிட்டு அவருடைய பெயருக்கும் புகழுக்கும் களங்கத்தை ஏற்படுத்த முயற்சித்துள்ளனர். அத்துடன் இப்பகுதியில் இருக்கும் ஏனைய உத்தியோகத்தர்களை பயமுறுத்தியுமுள்ளனர்.

இது விடயமாக குற்ற விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக அவர்கள் வாழும் நாட்டின் பாதுகாப்புத் தரப்பினருக்கும் சம்பந்தப்பட்டர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இப்பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லப்படும் செய்திகள் பற்றி நாம் கரிசனையாக இருக்க வேண்டும். சில சமயங்களில் உண்மையான தகவல்கள் வெளிக்கொண்டு வரப்படுவதில்லை. இதனால் பொதுமக்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு சேவை பாதிப்பு ஏற்படும். ஆகவே உன்னதமான மருத்துவ சேவை பற்றி மக்களுக்கு உண்மை நிலை கொண்டு செல்லப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

06.11.2017

(ஐப்பசி 20, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

துதியை காலை 7.49 மணிவரை

திருதியை பின்னிரவு 5.30 மணிவரை

ரோகினி பின்னிரவு 12.23 மணிவரை

சுபநேரம் 12.05-1.35 மணிவரை

இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி, விசாகம் | | ராகு |
| கேது | | | |
| | சனி<br>புத | சூரி<br>குரு<br>சுக் | செவ் |

**மீனம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொது நல ஈடுபாட்டால் புகழ் கிடைக்கும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** குடும்பத்தினர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு, யோகமான நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரிய மொன்றில் திருப்பங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, மனதில் தோன்றுவதை செய்வீர்கள்.

**கடகம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்த முற்படுவீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**துலாம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

# பெண்களுக்கு சமவாய்ப்பு நாடுகளின் தரப்படுத்தலில் பின்தள்ளப்பட்ட இலங்கை

(கொழும்பு)

பெண்களுக்கு சமவாய்ப்பை அளிக்கும் நாடுகளின் தரவரிசையில் இலங்கை 109ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

அரசியல், பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் சுகநலப் பாதுகாப்பு போன்றவற்றில் பெண்களுக்கு சமவாய்ப்பு அளிக்கும் நாடுகளின் 2017ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் பெண்களுக்கு அனைத்துத் துறைகளிலும் சமவாய்ப்பளிக்கும் நாடுகளின் தரவரிசையில் முதலாம் இடம் ஐஸ்லாந்துக்கும், இரண்டாம் இடம் நோர்வேக்கும், மூன்றாம் இடம் பின்லாந்துக்கும் அளிக்கப்பட்டுள்ளன.

இலங்கை இந்தப் பட்டியலில் 109ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த வருடம் இலங்கை 100ஆவது இடத்தில் இருந்தது.

எனினும், அண்மைக்காலமாக இலங்கையில் பாலின பாகுபாடுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக இந்த் ஆண்டுக்கான பட்டியலில் இலங்கை பின்தள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# செல்வாக்கான தலைவர்கள் ஐ.தே.கவில் யாரும் இல்லை

## கருத்துக் கணிப்பில் தகவல்

(கொழும்பு)

பொதுமக்களிடம் தனிப்பட்டமுறையில் செல்வாக்குப் பெற்றுள்ள தலைவர்கள் என்று ஐ.தே.கவில் யாரும் இல்லை என்பது கருத்துக் கணிப்பொன்றின் மூலம் தெரியுவந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கை நாடி பிடித்துப் பார்க்கும் வகையில் குளோபல் இன்வெஸ்ட்மண்ட் என்ற ஆய்வு நிறுவனம் மூலம் அண்மையில் நாடளாவிய ரீதியில் கருத்துக் கணிப்பொன்று மேற்கொண்டிருந்தது.

எதிர்வரும் தேர்தல்களின் போது கட்சியின் வெற்றிக்காக வகுக்கக் கூடிய வியூகங்கள் தொடர்பான திட்டமிடலுக்கான ஐ.தே.க. தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நடவடிக்கையை மேற்கொள்ள குறித்த நிறுவனத்துக்கு பொறுப்பை ஒப்படைத்திருந்தார்.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களில் எவரும் தனிப்பட்ட முறையில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

அதேநேரம் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஐ.தே.க. மேற்கொண்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்றுள்ளமையும் தெரியவந்துள்ளது. மேலும், இவ்வாறான பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் முதலீடுகள் போன்ற நடவடிக்கைகள் மூலமாக மட்டுமே எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெற ஏதுவாக இருக்கும் என்றும் குறித்த கருத்துக்கணிப்பு மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)


## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(சி-9675)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. முத்துராசா கமலக்கண்ணன்

2017.10.28 ஆம் திகதி வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட குரு பிரதீபா பிரபா நல்லாசிரியர் விருதினைப்பெற்ற அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய எமது பாடசாலை ஆசிரியர் **திரு.மு.கமலக்கண்ணன்** அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகள், பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

CONGRATULATIONS

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
கிளி. கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயம்,
கோணாவில்.
(சி-286)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தேசியநிலை நல்லாசிரியர்
குருபிரதீபா பிரபா விருது-2017

## திரு. சுப்பிரமணியம் சிவலிங்கம்

(Sc.Trd,BA, Dip. in Edu, SLTS-I)

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஆசிரியரும் குகன் குடிசை பொலிகண்டியை வதிவிடமாகவும் கொண்ட திரு.சுப்பிரமணியம் சிவலிங்கம் அவர்கள் 23.10.2017 பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நல்லாசிரியருக்கான தேசிய விருதான குருபிரதீபா பிரபா பாராட்டு விருதினை கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் முன்னிலையில் பெற்றுக்கொண்டதை மகிழ்வுடன் பாராட்டுவதோடு மேலும் சிறப்புக்களையும் உயர்வுகளையும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்மா, மாமா, மாமி, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்
(சி-280)



## அதிரடி விலை

- SUNDIRECT RECEIVER Rs.3250/- (ஒரு வருடம் இலவசம்)
- SUNDIRECT RECEIVER Rs.2000/- (5மாதம் இலவசம்)
- AIRTEL RECEIVER Rs.4700/- (ஒரு வருடம் இலவசம்)
- DISH TV RECEIVER (HD RECEIVER) Rs. 4500/- (3 மாதம் இலவசம்)
- VIDEO CON RECEIVER Rs.2250/- (package charge additional)
- 65 CM DISH ANTENNA Rs.1400/-
- Inb.(sharp or any) Rs.350/-
- அனைத்து கேபிள் ரிவி உதிரிப்பாகங்களும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.
- அனைத்து RECHARGEகளும் மிகக் குறைந்த விலையில்.

Only up to stock end.

C-279

CALL TO: 076 886 1160

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:23 செவ் 2 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:கணக்காளர் கனடா
தொ.இ: B/7916

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில் A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7917

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/சுவிஸ்
தொ.இ: B/7918

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/L/சுவிஸ் PR
தொ.இ: B/7919

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரோகிணி
கி.பா: 24 சூரி செவ் 10 இல்
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/7946

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 32 சூரி செவ் 6இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L/ஆசிரிய பயிற்சியாளர்
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7950

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 23
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/7960

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 52 செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc, QS/ பொறியியலாளர்
தொ.இ: G/7966

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# வாழ்வாதார உதவித்திட்டங்களுக்கு தெரிவான பயனாளிகளுக்கு விவசாயச்செய்கை உள்ளீடுகள்

## பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு வாழ்வாதார உதவித் திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவசாயச்செய்கைக்கான உள்ளீடுகள் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சினூடாக வழங்கப்பட்டு வருவதாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி.உகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நல்லிணக்க அமைச்சினூடாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும்தலா ஐம்பது பயனாளிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் ஐம்பது வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 22 விவசாயக் கிணறுகள் விவசாய உள்ளீடுகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

இதேபோல கண்டாவளைப்பிரதேசத்தில் ஐம்பது பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு தூவல் நீர்ப்பாசனத்திற்கான நீர்ப்பம்பிகள், தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டு நிலக்கடலைச்செய்கை ஊக்குவிக்கப்படுகின்றது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில்ஐம்பது பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுமுருங்கை மற்றும் மிளகாய் செய்கை ஊக்குவிக்கப்படுவதுடன், முருங்கையிலைகளை பதப்படுத்துகின்ற இயந்திரங்கள் 25 விவசாயக் கிணறுகள் என்பன வழங்கப்படுகின்றன.

பூநகரிப்பிரதேசத்தில் 25 நீர்பெறும் துறவுகள் சீர் செய்யப்படுவதுடன் தூவல் நீர்ப்பாசனமுறையிலான நிலக்கடலைச்செய்கைக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்ற என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனத்தில் இழுபறி நிலை

## சுகாதார அபிவிருத்தி பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் இன்றி கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக காணப்படுவதுடன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை நியமிப்பதில் மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்களிடையில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுவதனால் மாவட்டத்தின் சுகாதார அபிவிருத்தி ஒட்டுமொத்தமாக பாதித்துள்ளதாக பல்வேறு தரப்புக்களும் விசனம் தெரிவித்துள்ளன.

குறிப்பாக சுற்றயல் கூறு மற்றும் பிரதேச மாவட்ட வைத்தியசாலைகளிலும் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுவதுடன், மாவட்டப் பொது வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பிராந்திய சுகாதாரசேவைப்பணிப்பாளர் இன்றி கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது.

ஏற்கனவே இருந்த கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ப.கார்த்திகேயன் மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்றுள்ளார். மூன்று ஆண்டுகள் இவர் வெளிநாட்டுக்குக்கல்வியைத் தொடரவுள்ள நிலையில் இதற்கான வெற்றிடம் இதுவரை நிரப்பப்படவில்லை.

கடந்த இரண்டு மாதத்திற்கு மேலாக கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இன்றி இயங்கி வருவதனால் மாவட்டத்தின் சுகாதார சேவைகளும் அபிவிருத்திக் கட்டுமானங்களும் ஒட்டுமொத்தமாகப் பாதிப்படைந்துள்ளன.

ஏற்கனவே கடமையில் இருந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளிநாடு செல்லும் போது, இந்தப்பதவிக்கு வேறு யாரையும் நியமிப்பதற்கான வெற்றிடம் சுகாதார அமைச்சினால் காட்டப்படவில்லை.

ஆனால் பிற மாவட்டங்களில் நிலவிய இப்பதவிகளுக்கு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளபோதும், இந்த விடயம் தொடர்பாக, மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண வைத்தியர்களாலும் மத்திய அமைச்சின் பணிப்பாளருக்கு பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டு மூன்றுக்கு மேற்பட்ட தமிழ் வைத்தியர்களை அடையாளப்படுத்திய போதும். இன்று வரைக்கும் அதற்கான நியமனத்தை வழங்காது இழுபறி நிலையில் காணப்படுகின்றது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டெழும் இம் மாவட்டத்தின் வைத்தியத் துறையை மேம்படுத்தும் நோக்கில் தகுதி வாய்ந்த நீண்டகாலம் பணியாற்றக்கூடிய வைத்தியர்களை இவ்வெற்றிடத்திற்கு நிரப்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை பிரேரணை ஒன்றை வடக்கு மாகாண சபையில் கொண்டு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்கள் உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் மருத்துவ சேவையை முன்னெடுப்பதற்கு சுகாதாரப் பணிப்பாளர் அவசியம் என பல தரப்பினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-315)

## யோலன்டா போஸ்டர் முல்லைத்தீவிற்கு விஜயம் காணாமற்போனோரின் உறவினர்களை சந்தித்தார்

(பனிக்கன்குளம்)

சர்வதேச மன்னிப்புச் சபையில் பணியாற்றிய பிரித்தானியாவைச் சேர்ந்த யோலன்டா போஸ்டர் நிலைமாறு கால நீதி செயற்பாட்டில் இலங்கையின் நிலைமை தொடர்பில் ஆய்வு செய்வதற்காக வருகை தந்த நிலையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில்243-ஆவதுநாளாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தங்களின் உறவினர்களின் மீள் வருகைக்காகவே காத்திருக்கின்றோம். எங்களை பொறுத்தவரை நிலைமாறு கால நீதி செயற்பாட்டின் மூலமோ, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் மூலமோ எவ்வித நீதியும் கிடைக்கப் போவதில்லை இவை அனைத்தும் இலங்கை அரசு சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கே மேற்கொள்கிறது எனத் தெரிவித்தனர். (2-281)

## பார்த்தீனியச் செடியின் பரம்பல் அதிகரிப்பு கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை


(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பார்த்தீனியம் செடி மிக வேகமாக பரவி வருவதைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் பல் வேறு பகுதிகளிலும் பரவலாகப் பார்த்தீனியச் செடிகள் பரவிக் காணப்படுகின்றன.

இதேவேளை பயிர்ச் செய்கை நிலங்கள் பலவற்றிலும் பார்த்தீனியத்தின் தாக்கம் காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ள விவசாயிகள் இவ்வாறு நச்சுத் தாவரமான பார்த்தீனியத்தை கட்டுப்படுத்த உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# இரணைமடுகுள அபிவிருத்தி வேலைகள் 80 வீதம் பூர்த்தி



(பரந்தன்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் புனரமைக்கப்பட்டு வரும் கிளிநொச்சி இரணைமடுகுள அபிவிருத்தி பணியின் 80 வீதமான பணிகள் நிறைவுற்ற நிலையில் இரண்டு வருடங்களின் பின் இவ்வருடம் வழமையைவிட இரண்டு அடி நீர் மேலதிகமாக சேமிக்கக்கூடிய நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுகுளம் வழமையாக 34 அடி நீர் சேமிக்கப்படும். ஆனால் இவ்வருடம் போதிய மழைவீழ்ச்சி கிடைக்கும் போது 36 அடி வரை நீரை சேமிக்க முடியும் என நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிளிநொச்சியில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழைகாரணமாக மாவட்டத்தின் பல குளங்களினதும் நீர் மட்டம் உயர்வடைய தொடங்கியுள்ளது.

அந்த வகையில் இரணைமடுகுளம் 14.01 அடியாகவும், அக்கராயன்குளம் 09.00 அடியாகவும், கரியாலை நாகபடுவான்குளம் 00.10 அடியாகவும், கல்மடுகுளம் 10.03 அடியாகவும், கனகாம்பிகைகுளம் 07.00 அடியாகவும், வன்னேரிக்குளம் 04.03 அடியாகவும், புதுமுறிப் புக்குளம் 09.06அடியாகவும், பிரமந்தனாறுகுளம் 07.96 அடியாகவும், குடமுருட்டிகுளம் 04.00 அடியாகவும் மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்று காணப்படுகிறது.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால்நாளுக்கு நாள் குளங்களின் நீர்மட்டம் உயர்வடைந்து வரும் எனவும் நீர்ப்பாசனத் திணைக்களம்அறிவித்துள்ளது.(2-312)




## டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் கண்டு ஆலோசனை





(கூருமன்காடு)

வவுனியாவில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு ஆலோசனை வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இச் செயற்பாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிலையில் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை வைத்திருந்த சிலருக்கு சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான முன்னெச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்டது.

இதேவேளை வவுனியா நகரசபையின் உதவியுடன் இல்லங்களில் உள்ள கழிவுப் பொருட்களும் அகற்றப்பட்டன.

இந்நடவடிக்கையில் பொது சுகாதார பரிசோதகர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலுமில்லத் துப்புரவுப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இளைஞர்கள் ஒன்று கூடி துயிலுமில்லப் பகுதியில் துப்புரவுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்களுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கலந்து கொண்டார். (2-281)

# புதுக்குடியிருப்பில் பெய்த கனமழையையடுத்து

## நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கின

- வர்த்தக நிலையங்களினுள் வெள்ளநீர்
- சீரான வடிகான்கள் அமைக்கப்படவில்லை



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பில் கடந்த 2 நாட்களாக பெய்த கனமழையை அடுத்து புதுக் குடியிருப்பு நகரின் பலபகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

நேற்றுமுன்தினமிரவு நீண்ட நேரமாக தொடர்ந்த கனமழையை அடுத்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதோடு தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. குறிப்பாக புதுக்குடியிருப்பு நகரப் பகுதி வெள்ளக்காடாக காணப்பட்டதோடு வர்த்தக நிலையங்களினுள் வெள்ள நீர் உட்புகுந்தமையால் பல இலட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள், இலத்திரனியல் பொருட்கள், பல சரக்குப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் நீரில் மூழ்கி நாசமாகின.


இதேவேளை வெள்ளநீர் குடிமனையினுள் புகுந்தமையால் அவ்விடம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சி யளித்தது.

வடிகான்கள் ஒழுங்கான முறையில் அமைக்கப்படாமையினாலேயே தாம் வருடா வருடம் மழை காலங்களில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந் நிலையில் வர்த்தக நிலையங்களினுள் வெள்ள நீர் புகுந்தமையால் நேற்று காலை வர்த்தக நிலையங்களைத் திறந்து நனைந்த பொருட்களை அகற்றினர். எதிர்வரும்காலங்களில்வெள்ள நீர் வடிந்தோடக் கூடியவாறு வடிகான்களை அமைத்துத் தருமாறு வர்த்தகர்கள் கோருகின்றனர். (2-315-281)




# ஆலயம் உடைக்கப்பட்டு பணம், நகை திருட்டு



(குருமன்காடு)

வவுனியா வைரவபுளியங்குளம் ஞானவைரவர் ஆலயம் உடைக்கப்பட்டு நகைகள், பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு உடைக் கப்பட்டு குறித்த பொருட்கள் திருடப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

விசேட அபிஷேகங்களுடன் பூஜை இடம்பெற்றமையினால் மூலஸ்தான விக்கிரகத்தில் அணியப்பட்டிருந்த 2 பவுண் சங்கிலி திருடப்பட்டுள்ளதுடன் வேறு பொருட்களும் திருட்டுப் போயுள்ளதாக ஆலய நிர்வாகத் தினர் தெரிவித்தனர். காலை பூஜைகளுக்காக ஆலய பூசகர் கதவை திறந்த போதே பூட்டு உடைக்கப்பட்டதை அவதானித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். வவுனியாவில் கடந்த சில நாட்களாக ஆலயங்கள் உடைக்கப்பட்டு திருட்டு நடை பெறுவது குறிப்பிடத்தக்கது. (2-250)

# மீள்குடியேற்ற அமைச்சினால் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் மற்றும் மடு பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 350 பயனாளிகளுக்கு மீள் குடியேற்ற அமைச்சினால் வாழ்வாதார உதவித்திட்டங்கள் அண்மையில் பிரதேசச் செயலகங்களினூடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சுய தொழில் உபகரணங்கள் மடு பிரதேசச் செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கலந்து கொண்டு குறித்த சுய தொழில் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 250 பயனாளிகளுக்கு சுயதொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் அண்மையில் மன்னார் பிரதேசச் செயலகத்தில் பிரதேசச் செயலாளர் என். பரமதாசன் தலைமையில் நடைபெற்றது.

250 பயனாளிகளில் முதற் கட்டமாக அமைச்சர் டி.எம். சுவாமிநாதனினால் 15 பயனாளிகளுக்கு சுய தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 120 பயனாளிகளுக்கு மீள் குடியேற்ற அமைச்சினால் வாழ்வாதார உதவித் திட்டங்கள் அண்மையில்பிரதேசச் செயலகங்களினூடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சுய தொழில் உபகரணங்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கலந்து கொண்டு குறித்த சுய தொழில் உபகரணங்களை வழங்கி வைத்தார். (2-281)

# உயிரிழை அமைப்பின் மாங்குளம் புதியகட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்



(பனிக்கன்குளம்)

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் அமைப்பான உயிரிழை அமைப்பின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் ஸ்ரீகரன் தலைமையில் மாங்குளத்தில் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

அடிக்கல்லை Lebara நிறுவன நிறுவுனர் கந்தையா பாஸ்கரன் மற்றும் யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.சத்தியமூர்த்தி ஆகியோர் நாட்டி வைத்தனர். (2-281)

# மு/மாங்குளம் ம.வித்தியில் கல்விக் கண்காட்சி

(கிளிநொச்சி)

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சி இன்றைய தினம் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் த. யோகானந்தராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் துணுக்காய் வலய திட்டமிடல் பிரதிக் கல்வி பணிப்பாளர் செல்வி. இ. கம்சத்வனி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். தமிழ், வரலாறு, கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம். நுண்கலைகள் என அனைத்துப் பாடங்களுக்குமான புத்தாக்க முயற்சிச் செயற்பாடுகளாக இக் கண்காட்சி அமையவுள்ளது. (2)

# வைத்தியர்களின் பற்றாக்குறை தொடர்பில் பாராளுமன்றில் அழுத்தம் பிரயோகிக்கவுள்ளோம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கண்டாவளை)

வடக்கு மாகாணத்தில் வைத்தியர்கள் வெற்றிடமாக உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்களை நியமிப்பதில் மாகாண அரசுக்கு அதிகாரங்கள் இல்லை என்றும் மத்திய சுகாதார அமைச்சில் தங்கியிருக்க வேண்டும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா. குணசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கும்போது, வைத்தியர் நியமனம் என்பது மத்திய அரசினால் செய்யப்படுகின்றது. மாகாண அமைச்சுக்கு அதிகாரங்கள் இல்லை. மத்திய சுகாதார அமைச்சு வைத்தியர்களை நியமிக்கும் போது வடக்கு மாகாணத்தில் எந்தெந்த வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் பற்றாக்குறைகள் மற்றும் எந்தெந்த வைத்தியசாலைகளுக்கு வைத்தியர் வெற்றிடம் உள்ளன என்றும் மத்திய சுகாதார அமைச்சுக்கு வடக்கு மாகான அமைச்சினால் அனுப்பி வைக்கின்றோம்.

அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மத்திய சுகாதார அமைச்சும் அகில இலங்கை வைத்தியர் சங்கமும் இணைந்து நடவடிக்கை எடுக்கும்.

வடக்கு மாகாணத்தில் பின்தங்கிய வைத்தியசாலைகளில் கடமைகளைப் பொறுப்பேற்ற சில வைத்தியர்கள் வேலையை தாங்களாக இரத்துச்செய்து விட்டு வெளியேறுகின்றனர்.

இதனால் பின்தங்கிய சில வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இந்த வைத்தியர் பற்றாக்குறை தொடர்பில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்று பாராளுமன்றத்திலும் வைத்தியர்கள் பற்றாக்குறைகள் தொடர்பில் அழுத்தத்தைப் பிரயோகித்து இரண்டு, மூன்று வருடங்களுக்குள் வைத்தியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (2-315)

# வன்னி மாற்றுத்திறனாளிகள் காப்பகம் கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

(பரந்தன்)

கிளிநொச்சி ,முல்லைதீவு ,வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம் மற்றும் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அண்மையில் கிளிநொச்சி கனகபுரம் வீதி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு அருகாமையில் வன்னி மாற்றுத் திறனாளிகள் காப்பகம் என்ற மனிதாபிமான தொண்டர் நிறுவனம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

வன்னி மாற்றுத் திறனாளிகள் காப்பகமானது எமது புலம்பெயர் மற்றும் தாயக உறவுகளினால் வழங்கப்படுகின்ற நன்கொடைகளை வைத்து இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு மீண்டெழ முடியாமல் தவிக்கின்ற மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிந்து உதவுவதே இதன் நோக்கம் எனத் இதன் இணைப்பாளர் தென்னக்கோன் சாரத் தெரிவித்தார்.

இந்த அமைப்புக்கு உதவிகளை வழங்க வேண்டும் என எண்ணுபவர்கள் தமது கனகபுரத்தில் உள்ள அலுவலகத்தில் தொடர்புக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (2-312)

# மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வசாவிளானில் இராணுவக் குடியிருப்பு முன் போராட்டம்













(படங்கள்: சோபிகா)






(யாழ்ப்பாணம்)

வசாவிளான் மற்றும் பலாலி தெற்கு மக்களின் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வசாவிளான் கிராம முன்னேற்றச் சங்க முன்றலில் இருந்து பலாலி இராணுவ குடியிருப்பின் பிரதான நுழைவாயில் வரை விழிப்புணர்வு அமைதிப் பேரணி ஒன்று நேற்று ஞாயிற்றுக் கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வசாவிளான் சமூகநல அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப் போராட்டத்தில் 'எமது மண் எமக்கானது' என்ற கோரிக்கையை முன்வைத்து பலாலி இராணுவக் குடியிருப்பு முன்றலில் போராட்டம் ஒன்றினையும் மேற்கொண்டிருந்தனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் வசாவிளான் பகுதி மக்களுடைய காணிகள் விடுவிக்கப்படும் என படைத்தரப்பு தெரிவித்திருந்தது. ஆனால் குறித்த வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் இந்த அமைதி போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது என பொதுமக்கள் தெரிவித்தனர்.

ஒருவருட காலமாக தொடர் பேச்சுவார்த்தை, மனு கையளிப்பு என பல நடவடிக்கையை படைத்தரப்பு மட்டத்திலும், அரச மட்டத்திலும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமும் நேரில் முன்வைக்கப்பட்ட போதும் அதற்கான தீர்வையோ அல்லது அறிகுறிகளையோ அவர்கள் முன்வைக்கவில்லை. ஆகவே நியாயமான எமது கோரிக்கைகளில் அவதானம் செலுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கிலேயே குறித்த விழிப்புணர்வு பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

எனவே மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து உரிய தீர்வு சம்பந்தப்பட்ட தரப்பினரால் முன்வைக்கப்பட வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் தொடர் போராட்டங்களை பல்வேறு வடிவங்களில் நடத்துவதில் கவனம் செலுத்தப்படும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்திருந்தனர்.

போராட்ட முடிவில், யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சியிடம் ஜனாதிபதிக்குரிய மகஜர் கையளிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக இராணுவ தளபதியால் வாக்குறுதி வழங்கப்பட்டது.

இப்பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மீள்குடியேற்ற சங்கங்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## 10 வயதுச் சிறுமி மீது சித்திரவதை சித்தியும் மைத்துநரும் கைதாகினர்



(கொழும்பு)

பொகவந்தலாவை போனோகோட் தோட்டத்தில் தரம் 5 இல் கல்வி பயிலும் பத்து வயது சிறுமியை தாக்கி துன்புறுத்தலுக்குட்படுத்திய சித்தியையும் சிறுமியின் மைத்துநர் ஒருவரையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொகவந்தலாவை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் குறித்த சிறுமியையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பத்து வயது சிறுமியின் தாய் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகின்றார். சிறுமியின் தந்தை கொழும்பில் தொழில் புரிந்து வருகின்றார்.

குறித்த சிறுமி கடந்த ஒன்பது வருடகாலமாக தனது பாட்டியின் பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளார். கடந்த வருடம் சிறுமியை சித்தியிடம் ஒப்படைத்து விட்டு பாட்டி கொழும்பிற்கு சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சிறுமியின் கல்வி நடவடிக்கைக்காகவும் உணவு போன்ற வேறு செலவுகளுக்காகவும் மாதாந்தம் அவரின் தாயார் வெளிநாட்டில் இருந்து சிறுமியின் சித்திக்கு 15 ஆயிரம் ரூபா பணம் அனுப்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சிறுமியை வீட்டில் ஒரு வேலைக்காரியாக சித்தி நடத்தி வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 6.30 மணி அளவில் குறித்த சிறுமி கடுமையாக கையினால் தாக்கப்பட்ட நிலையில், சிறுமி ஓடி அயல் வீடு ஒன்றில் மறைந்து இருந்ததாகவும் சிறுமியை தேடி சென்ற மைத்துநர், சிறுமியை தடி ஒன்றினால் கடுமையாக தாக்கி தலையை பிடித்து தள்ளிவிட்டதாக குறித்த சிறுமி பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் போனகோட் தோட்டமக்களால் பொகவந்தலாவ பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து குறித்த தோட்டத்திற்கு சென்ற பொலிஸார் சிறுமியை மீட்டுள்ளதோடு சிறுமியின் சித்தியையும் மைத்துநரையும் கைது செய்துள்ளனர். குறித்த சிறுமியின் உடலில் உள்காயங்கள் காணப்படுவதோடு சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்காக டிக்கோயா கிழங்கன் மாவட்ட வைத்திய சாலைக்கு சிறுமி அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## மழை வெள்ளத்தால் மக்கள் பாதிப்பு

(கரணவாய்)

கம்பர் மலை உடுப்பிட்டி வடக்கு செம்பாடு ஜே/ 350 பகுதியில் அமைந்துள்ள செம் பாட்டு ஒழுங்கை பல வருட காலமாக மணல் ஒழுங்கை யாக உள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஒழுங்கைக்கு அருகாமையில் குடியிருக்கும் பொதுமக்கள் தற்பொழுது பெய்து வரும் கடும் மழையினால், மழை நீர் தேங்கி வீடுகளிற்குள் உட்புகுந்துள்ளதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயம் குறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)





## வேப்பமரம் பாறி விழுந்ததில் வீட்டின் முன்பகுதிக்குச் சேதம்



(கரணவாய்)

வேப்பமரம் பாறி விழுந்ததில் முன் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது. இச் சம்பவம் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமை காலை 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது;

நுணாவில் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த தனுசன் என்பவரது வீடே சேதமடைந்துள்ளது. மழை காரணமாக நிலம் ஈரலிப்பாக இருந்ததினால் வேப்பமரம் வேருடன் சாய்ந்து வீட்டின் மீது வீழ்ந்துள்ளது.

இருப்பினும் யாருக்கும் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை. (இ;-60)

# போதனா வைத்தியசாலை- யாழ்ப்பாணம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2018

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2018 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரித்து பின்வரும் வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித் தனியாக மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1000.00 ஐ எமது அலுவலக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் பெயருக்கு பெறப்பட்ட பிரதான அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் காசாக்கக் கூடிய காசுக் கட்டளையை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு இடது பக்கமேல் மூலையில் "வழங்குநர்கள் பதிவுசெய்தல் - 2018" எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2017.12.15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம்.

| உருப்படி இல | பொது பொருட்கள் |
|---|---|
| A – 01 | அலுவலக காகிதாதிகள்,எழுது பொருட்கள்,மற்றும் அதனுடன் தொடர்புடையபொருட்கள். |
| A – 02 | தளபாடங்களும்,அலுவலக உபகரணங்களும் (மரம்,உருக்கு,பிளாஸ்ரிக்,பைவர் போன்றவை) |
| A – 03 | கணனிகள்,கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள்,போட்டோபிரதி இயந்திரம், இலத்திரனியல் பிரதிபண்ணும் இயந்திரங்கள் (Duplo), CCTV கமராக்கள்,றோனியோ இயந்திரம்,தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள்,றிபன்கள் என்பன. |
| A – 04 | யன்னல் திரைச்சீலைகள்,சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A – 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள் வகைகள் நீர்க்குழாய்கள், இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A – 06 | சகல விதமான வீட்டுப் பாவனைப் பொருட்கள் (வாளி, ஜக்,கேத்தல்,பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள்,பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவை) |
| A – 07 | தும்புமெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ்,எலாஸ்டிக்,நைலோன் நூல் மற்றும் பஞ்சிலான தலையணைகள் போன்றவை. |
| A– 08 | கட்டட, இரும்புப் பொருட்கள்,பெயின்ற்,வாணிஸ் மற்றும் சகல 'ஹாட்வெயர் பொருட்கள் மணல்,கல்,தீராந்தி,சலாகைபோன்றவை. |
| A – 09 | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள்,மின் மோட்டர்கள் ,மின்பல்புக்கள்,மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடையபொருட்களும். |
| A – 10 | புற்பாய், தும்புத்தடி,விளக்குமாறு,கால் துடைப்பம்,மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A – 11 | எல்லாவிதமான காபோலிக் சவர்க்காரம், இயந்திரத்தில் துணிதுவைக்கும் தூள்,பார் சவர்க்காரம் சுத்தப்படுத்துவதற்கான திரவ வகைகள்,சவர்க்காரத்தூள்,சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை. |
| A – 12 | டயர்,டியூப்,பற்றிகள் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| A– 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள்,சிலிப்பர்கள்,எல்லாவிதமான பாதணிகள். |
| A– 14 | குளிர்சாதனப் பெட்டிகள்,காற்றுக் குளிராக்கிகள்,தொலைக்காட்சிப்பெட்டிகள்,DVD p layer மற்றும் அதன் உதிரிப்பாகங்களும். |
| A – 15 | சகலவகையான ரெக்சீன் துணிகள்,பொலித்தீன்,பைகள்,கழிவகற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை. |
| A – 16 | இறப்பர் முத்திரை வகைகள்,பிளாஸ்ரிக் பெயர்ப்பலகை,தினமுத்திரைகள் தயாரித்தல். |
| A – 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள். |
| A - 18 | LP வாயு மற்றும் வாயு ரெகுலேட்டர்,காஸ் பனர்,காஸ் குழாய். |
| A - 19 | சத்திர சிகிச்சைக்கு தேவையான தைத்த உடுப்புகள் (வைத்தியர்,தாதி,சிரேஷ்ட ஊழியர்கள், நுளம்புவலை,கட்டில் விரிப்பு,தலையணை உறை, GS Towel) |
| A – 20 | அலுவல கஅடையாள அட்டை மற்றும் பெயர் பலகை தயாரித்தல். |
| A – 21 | மருந்துகள் இடும் உறை / X கதிர் அட்டை இடும் உறைமற்றும் அச்சிடல் வேலைகள் போன்றவை. |

| உருப்படி இல | மருத்துவப் பொருட்கள் |
|---|---|
| B- 01 | சத்திரசிகிச்சை, மருத்துவ உபகரணங்கள் போன்றவை. |
| B-02 | ஆய்வு கூட உபகரணங்கள். |
| B-03 | சத்திரசிகிச்சை, மருத்துவ ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள் (biopsy needles, catheter , Distill water, surgical spirit , & other such things etc) |
| B-04 | பதிவு செய்யும் சுருள்கள் [Recording Paper] (ECG, ETT, CTG, EEG recording paper & other such things) |
| B-05 | சத்திர சிகிச்சைப் பாதுகாப்புப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், சத்திரசிகிச்சைத் துணையுறுப்புகள் / X கதிர்போன்றவை. |

| உருப்படி இல | சேவைகள் |
|---|---|
| C – 01 | உருக்கு மற்றும் மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் போன்றவை. |
| C – 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி பெட்டிகள் அதனோடிணைந்த உபகரணங்கள்) |
| C – 03 | மின் மோட்டர்கள்,நீர் இறைக்கும் இயந்திரங்கள்,மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீளமுறுக்குதலும் (Rewinding) |
| C – 04 | அலுவலக உபகரணங்கள் திருத்துதல் (கணனி, Duplo இயந்திரம்,புகைப்படபிரதி இயந்திரம், Fax இயந்திரம்) |
| C – 05 | பத்திரிகை விளம்பரம் பிரசுரித்தல். |
| C – 06. | சலவை சேவைகள். |
| C – 07 | காற்றுக்குளிராக்கி பராமரித்தல் - Air Conditioner Maintenance |
| C – 08 | உள்ளக தொலைபேசி மற்றும் உள்ளக வலையமைப்பு பராமரித்தல் - Intercom Maintenance |
| C – 09 | வாயு அடுப்பு, வாயு மற்றும் ஒட்சிசன் உபகரணங்கள் திருத்துதல் |
| C – 10 | வீட்டு உபயோகப் பொருட்கள் திருத்துதல்,பொலிசிங் செய்தல்,கதிரைபின்னுதல் |
| C – 11 | வைத்தியசாலை உபகரணங்கள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் திருத்துதல் |
| C - 12 | தையல் வேலைகள். |

(சி-277)

| உருப்படி இல | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D – 01 | சகல விதமான வாகனங்கள் திருத்துதல், வாகன மின்சார, குளிரூட்டி திருத்த வேலைகள், சீற், குசன் வேலைகள் போன்றவை. |
| D – 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்புச் செய்தல். |

| உருப்படி இல | வேலைகள் |
|---|---|
| E – 01 | கட்டட நிர்மாணம், கட்டட புனரமைப்பு, கட்டடத் திருத்தங்கள் போன்றவை (கட்டுமான பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவுசெய்யப்பட்ட செல்லுபடியாகும் காலத்திற்குரிய பிரதி இணைக்கப்படல் வேண்டும்) |
| E – 02 | அலுமினிய நிர்மாண வேலைகள். |
| E-03 | தொலைபேசி இணைப்பு மற்றும் உள்ளக வலையமைப்பு போன்றவை. |

| உருப்படி இல | அகற்றப்படும் பொருட்களை விற்பனை செய்தல் |
|---|---|
| F-01 | (கண்ணாடி,பிளாஸ்டிக் போத்தல்,அலுமினியப் பாத்திரம் , X-கதிர் அட்டை , X -கதிர் கழுவும் திரவம், சிரட்டை, டயர், டியூப், சமையல் அறையில் அகற்றப்படும் சகல விதமான பொருட்கள் அட்டை, கடதாசி மற்றும் கடதாசிப் பெட்டிகள் போன்றவை) |

நிபந்தனைகள்:

01. வழங்கல்கள்,சேவைகள் 2018ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள், சேவைகளை நிராகரிக்கவும் வெளி மூலங்களிலிருந்தும் கேள்விகோரும் உரிமையும் பணிப்பாளருக்கு உண்டு.
03. பதிவுக்காகப் பெறப்பட்டவிண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
04. பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஆகக் குறைந்தது ஒருமாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
05. குறித்த தரத்திற்கு மற்றும் மாதிரிக்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை தேவையான அளவுக்கு குறித்த திகதியில் வழங்குதல் வேண்டும்.
06. அனைத்து வழங்கல்களையும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
07. வழங்குநர்களை பதிவு செய்யும் போது வியாபாரப் பெயர் பதிவு சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்துள்ள வழங்கலுக்கு எதிர்பார்க்கின்ற அனைத்துப் பொருள் வியாபார நிலையங்களில் இருந்தும் சந்தைப்படுத்தப்படுகின்ற மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் வழங்குநராக பதிவுசெய்யப்படும்.
08. மேலதிக விபரங்கள் பெறவிரும்பின் கணக்காளர், போதனா வைத்தியசாலை. யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
06/12/2017

மாதிரி விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| காசுபற்றுச்சீட்டு/ காசுகட்டளைஇல: | |
| திகதி | |
| தொகை | |

### வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் - 2018
### போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

1. நிறுவனத்தின் பெயர் :
2. நிறுவனத்தின் முகவரி :
3. தொலைபேசி இல. :
4. தொலைநகல் இல. :
5. மின்னஞ்சல் முகவரி :
6. வியாபாரப் பதிவுபெயர் :

(வியாபாரப் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

7. VAT:பதிவு இலக்கம் :

8. கடன் வசதி பற்றிய விபரம் (காலஎல்லை/தொகை):

| உருப்படி இலக்கம் | வழங்கல் /சேவைவிபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நியந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/ சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிப்பதுடன் ரூபா............க்குரிய பற்றுசீட்டு/ காசுக்கட்டளை இத்துடன் இணைத்துள்ளேன்.

..................................
விண்ணப்பதாரியின் பெயர்

..................................
விண்ணப்பதாரியின் ஒப்பமும்
நிறுவன றப்பர் முத்திரையும்

# பாரதம்

## வாரணாசியில் கமல்ஹாசன் மீதான வழக்கு 22ஆம் திகதி விசாரணைக்கு



(லக்னோ)

இந்து தீவிரவாதம் இனியும் இல்லை என்று கூறமுடியாது என கருத்து தெரிவித்த நடிகர் கமல்ஹாசன் மீது நடவடிக்கை கோரி வாரணாசி நீதிமன்றில் தாக்கல் செய்த மனு 22ஆம் திகதி விசாரணைக்குவர உள்ளது.

தமிழ் வார இதழ் ஒன்றில் கட்டுரை எழுதி வரும் நடிகர் கமல்ஹாசன், இந்து வலதுசாரியினரும் வன்முறையில் ஈடுபட ஆரம்பித்துவிட்டதாகவும், எங்கே ஓர் இந்துத் தீவிரவாதியைக் காட்டுங்கள் என்ற சவாலை இனி அவர்கள் விட முடியாது என்று கட்டுரையில் கூறியிருந்தார்.

கமல்ஹாசன் கருத்துக்கு பா.ஜ.க மற்றும் சிவசேனா தலைவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதற்கிடையே, கமல்ஹாசன் மீது உத்தரபிரதேசத்தில் பனாரஸ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.


மேலும், கமலேஷ் சந்திர திரிபாதி என்ற சட்டத்தரணி, வாரணாசியில் உள்ள கூடுதல் தலைமை நீதிமன்றில் புகார் மனு கொடுத்தார்.

அதில், கமல்ஹாசன் தெரிவித்த கருத்துகள் இந்துக்களின் மத உணர்வைப் புண்படுத்தி இருப்பதாகவும், எனவே அவர் இதுபோன்ற கருத்துகளை இனிமேல் தெரிவிக்க தடை விதிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

தனது மனு மீது எதிர்வரும் 22ஆம் திகதி விசாரணை நடத்த நீதிமன்றம் முடிவு செய்திருப்பதாக கமலேஷ் சந்திர திரிபாதி தெரிவித்தார். (இ-7)

## காங்கிரஸ் குஜராத்திற்கு செய்த துரோகத்தை மறந்துவிடக்கூடாது

### அமித்ஷா ஆவேசம்



(டில்லி)

காங்கிரஸின் ஆட்சிக் காலத்தில் குஜராத் ஒதுக்கப்பட்டிருந்ததை வாக்காளர்கள் மறந்துவிடக் கூடாது என, பா.ஜ.க. தலைவர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தின் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள அமித்ஷா, நேற்று ஞாயிற்றுக்கிழமை காந்திதாம் நகரில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு, மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கிரஸ் ஆட்சியின் போது குஜராத்திற்கு உரிய நிதியை வழங்குவதில்லை. திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில்லை.

அத்துடன் நர்மதா அணை திட்டத்தை செயற்படுத்த விடாமல் தடுத்தார்கள். அணை கட்டுமான பணி முடிந்ததும் அதை செயலுக்கு கொண்டு வர அனுமதி வழங்கவில்லை.

இப்படி குஜராத்திற்கு எதிராகவே காங்கிரஸ் செயற்பட்டு வந்தது என்பதை, மக்கள் மறந்துவிடக்கூடாது" என அமித்ஷா ஆவேசத்துடன் கூறினார். (இ-7)

## சபரிமலை பம்பை ஆற்றில் வெள்ளப்பெருக்கு – 3 பேர் பலி



(திருவனந்தபுரம்)

கேரளாவில் பெய்து வரும் கனமழையால் சபரிமலை பம்பை ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. மேலும் இந்த மழைக்கு குழந்தை உட்பட 3 பேர் பலியாகி உள்ளனர்.

கேரளாவில் வடகிழக்கு பருவ மழை கடந்த 3 நாட்களாக பெய்து வருகிறது. திருவனந்தபுரம், வயநாடு, கோட்டாக்கடை, மலப்புரம் ஆகிய பகுதிகளில் இடைவிடாமல் மழை பெய்து வருகிறது. இதனால் வீதிகளில் தண்ணீர் வெள்ளம் போல ஓடுகிறது.

பல இடங்களில் பெரிய மரங்கள் வீதியில் சாய்ந்ததால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும் மின் தடையாலும் பொதுமக்கள் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

மேலும் சபரிமலையிலும் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள புனித நதியான பம்பை ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. சபரிமலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி மண்டல பூஜைக்காக நடை திறக்கப்படவுள்ளது.

இதற்கான அனைத்து முன் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் அங்கு மழை பெய்து வருவதால் இறுதிக்கட்ட பணிகளில் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. (இ-7)

## இளவரசர்கள், அமைச்சர்கள்

## நிதிமோசடிக்குற்றச்சாட்டில்

## சவுதியில் 6







(ரியாத்)

சவுதியில் பிரபல கோடீஸ்வர் உட்பட இளவரசர்கள் மற்றும் முன்னாள், இந்நாள் அமைச்சர்கள் என 15 க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டதையடுத்து அங்கு பெரும் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

நிதி மோசடி குற்றச்சாட்டு தொடர்பிலேயே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரபல கோடீஸ்வரரான வலித் பின் தலால் மற்றும் இளவரசர்கள், முன்னாள், இந்நாள் அமைச்சர்கள், தொழில் அதிபர்கள் என பலர் அதிரடியாக கைதுசெய்யப்பட்டமை சவுதியில் பெரும் பரபரப்பையேற்படுத்தியுள்ளது.

இதேவேளை அங்கிருந்து எவரும் நாட்டை விட்டு தப்பிச்செல்ல முடியாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-7)

## விமான நிலையத்

## சவுதியில் ஏவு


(ரியாத்)

சவுதி அரேபியா நாட்டின் தலைநகரில் உள்ள விமான நிலையத்தை குறிவைத்து ஏவுகணை தாக்குதல் நடந்துள்ளது என அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாத் சர்வதேச விமான நிலையம் அருகே வடகிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் வெடிகுண்டு தாக்குதல் நடந்துள்ளது. இந்த தாக்குதல் விமானங்களை குறிவைத்து

## வியட்நாமை விளாசிய தாம்ரே இதுவரை 20 பேர் உயிரிழப்பு





(ஹனோய்)

வியட்நாமை தாம்ரே (Damrey) சூறாவளி தாக்கியுள்ளதைத் தொடர்ந்து, அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளது.

தாம்ரே சூறாவளியானது நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை தாக்கியுள்ளது. இதனையடுத்து 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 12 பேர் காணாமல் போயுள்ள நிலையில், அவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சூறாவளித் தாக்கம் காரணமாக இதுவரையில் 33 ஆயிரம் பேர் தங்களது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதுடன், சூறாவளியால் 370க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இதேவேளை, வியட்நாமில் மணிக்கு 90 கிலோமீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசியுள்ள நிலையில், நூற்றுக்கணக்கான மின்கம்பங்கள் சரிந்து விழுந்துள்ளதுடன், மரங்கள் வேரோடு பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான வீடுகள் மற்றும் பொதுவிடங்களின் கூரைகள் காற்றில் அள்ளுண்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர். (இ-7)

# வெளிநாடு



## ...ள் உள்ளிட்ட 15 பேர் ...ல் அதிரடிக் கைது ...ல் பெரும் பரபரப்பு



## சுதந்திரத்தை பாதுகாக்க அமெரிக்காவும் நட்பு நாடுகளும் தயாராகவுள்ளன

(டோக்கியோ)

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்குத் தயாராகவுள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஜப்பானை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சென்றடைந்த போதே, மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



ஜனாதிபதி ட்ரம்ப் உறுதி

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ள நாம், தவறிழைப்பதற்கு ஒருபோதும் முற்படமாட்டோம். சர்வாதிகார ஆட்சியை நாம் முன்னெடுப்பதில்லையென்பதுடன், அமெரிக்காவின் நடவடிக்கைகளை எந்தவொரு நாடும் குறைத்து மதிப்பிடாது என்றார்.

சுதந்திரம் மற்றும் சமாதானத்தை பாதுகாக்கும் நோக்கில் இராணுவத்துக்குத் தேவையான ஆதாரங்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும் நான் விரும்புகின்றேன்' எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜப்பானைச் சென்றடைந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பை, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே வரவேற்றுள்ளார்.

வடகொரியாவின் ஏவுகணை மற்றும் அணுவாயுத அச்சுறுத்தல் காரணமாக அந்நாட்டுக்கு எதிரான தீர்மானமொன்றை இரு நாட்டுத் தலைவர்களும் இணைந்து முன்வைக்கக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

## ...லயத்தை இலக்கு வைத்து ஏவுகணைத்தாக்குதல்



நடத்தப்பட்டது என கூறப்படுகிறது.

இதுதொடர்பாக செய்தி நிறுவனங்கள் கூறுகையில், ஏவுகணை தாக்குதல் தொடர்பான சேத விபரங் கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இந்த தாக்குதலுக்கு ஏமன் நாட்டை சேர்ந்த ஹவுதி அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர். இது சுமார் 500 கி.மீ., வரை சென்று தாக்கும் பாலிஸ்டிக் ஏவுகணை வகையை சார்ந்தது என தெரிவித்துள்ளன. (இ-7)

## சிரியாவில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலுக்கு அப்பாவி மக்கள் 20 பேர் பலி!

(பெய்ரூட்)

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய கார்க் குண்டுத் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 12 பேர் பலியாகினர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிரியா நாட்டில் 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அங்குள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளை அழிப்பதில் ரஷ்யாவும், அமெரிக்காவும் சிரியா நாட்டினருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். இதுபோன்ற தாக்குதல்களில் சில சமயம் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.



இந்நிலையில், சிரியாவின் டேர் எஸ்ஸர் நகரில் பொதுமக்கள் கூடியிருந்த இடத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று கார் வெடிகுண்டு மூலம் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், 12 பேர் படுகாயம் அடைந்தனர். தகவலறிந்து அங்கு சென்ற பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர் என சிரிய மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## வெடிகுண்டுத் தாக்குதலில் ஏமனில் 5 ராணுவத்தினர் பலி!



(ஏடன்)

ஏமன் நாட்டின் ஏடன் நகரில் அரசு அலுவலகங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய கார் வெடிகுண்டு தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

ஏமன் நாட்டின் ஏடன் பகுதியில் உள்ள கோர் மக்ஸர் மாவட்ட அரசு அலுவலகம் மீது தீவிரவாதிகள் நேற்று கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 5 இராணுவத்தினர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த தாக்குதலையடுத்து அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது. மேலும் பலர் இந்த் தாக்குதலில் காயமடைந்துள்ளனர் என கூறப்பட்டுள்ளதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இந்த தாக்குதலை அல்-கொய்தா தீவிரவாத அமைப்பு நடத்தியதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

## தீ விபத்தில் 15 பேர் படுகாயம்

(ஹரியானா)

ஹரியானா மாநிலம் ஹிசர் மாவட்டத்தில் உள்ள எண்ணெய் ஆலையில், எண்ணெய்த் தாங்கி ஒன்று வெடித்ததில் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த ஆலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கசிவு காரணமாக எண்ணெய்த் தாங்கி ஒன்று வெடித்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்தில் ஏழு பேர் அதிக தீக்காயங்களுக்கு உள்ளானதில், உயிருக்கு போராடியவாறு சிகிச்சை பெற்று வருவதாக குறிப்பிடப்படுகின்ற நிலையில், இது குறித்த மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரிவினைவாதக்கட்சிகள் ஒன்றிணையவேண்டும்

### காட்டலோனியா தலைவர் கார்லெஸ் அழைப்பு

(பார்சிலோனா)

டிசெம்பரில் நடைபெறவுள்ள காட்டலோனிய தேர்தலில் பிரிவினைவாத கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கார்லஸ் பூட்ஜியமோண்ட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஸ்பெயின் நாட்டு பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மாகாணம் காட்டலோனியா. இங்கு தனிநாடாக பிரிவது தொடர்பான வாக்கெடுப்பு கடந்த மாதம் முதலாம் திகதி நடந்தது. இதில் பங்கேற்ற 2.3 மில்லியன் மக்களில் 90 வீதமானோர் தனிநாடாக காட்டலோனியா பிரிந்து செல்வதற்கு ஆதரவு தெரிவித்தனர். இதையடுத்து, கடந்த மாதம் 27 ஆம் திகதி ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றதாக காட்டலோனியா பாராளுமன்றம் அறிவித்தது.

காட்டலோனியா சுதந்திர பிரகடனம் செய்த சில மணி நேரங்களில் பாராளுமன்றத்தை கலைத்து, நேரடி நிர்வாகம் அமுல்படுத்தப்படுவதாக ஸ்பெயின் அரசு அறிவித்தது. கலைக்கப்பட்ட காட்டலோனியா பாராளுமன்றத்திற்கு டிசெம்பர் மாதம் மறு தேர்தல் நடத்தப்படும் என தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, பிரிவினைவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறி காட்டலோனியா தலைவர் கார்லஸ் பூட்ஜியமோண்ட் உள்ளிட்ட 5 பேர் மீது ஸ்பெயின் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. விசாரணைக்கு ஆஜராகாத பூட்ஜியமோண்ட் உட்பட 5 பேருக்கு பிடியாணை பிறப்பித்து நீதிமன்று உத்தரவிட்டது.

இந்நிலையில், டிசம்பரில் நடைபெறவுள்ள தேர்தலில் பிரிவினைவாத கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கார்லஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் டுவிட்டரில், நியாயமான விசாரணைக்கு உத்தரவாதம் அளிக்கும்வரை என்னால் ஸ்பெயினுக்கு திரும்பி வரமுடியாது. நீதிமன்றத்தால் தேடப்பட்டு வரும் நிலையிலும் தேர்தலில் போட்டியிட நான் தயாராக உள்ளேன். எனவே, டிசம்பரில் நடைபெறவுள்ள தேர்தலில் பிரிவினைவாத கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர வேண்டும் என பதிவிட்டிருந்தார். (இ-7)

# இலங்கை- சீன கைத்தொழில் பணியகம் அம்பாந்தோட்டையில் திறந்து வைப்பு

## பிரதமர் ரணில் பங்கேற்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் சீன- இலங்கை அரசாங்கங்கள் கூட்டாக இணைந்து, இலங்கை- சீன தளபாடங்கள் மற்றும் கைத்தொழில் பணியகம் ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த பணியகத்தை திறந்து வைத்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் அதிகாரபூர்வமாக இயங்கத் தொடங்கும், 50 சதுர கி.மீ பரப்பளவுடைய கைத்தொழில் வலயத்தை இந்தப் பணியகம் மேற்பார்வை செய்யும்.

இந்தப் பணியகத்தில் சீன- இலங்கை பணியாளர்கள் இணைந்து பணியாற்றுவர்.

இந்தப் பணியகம், சீன- இலங்கை உறவுகளில் முக்கியமானதொரு மைல் கல் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியப் பெருங்கடலில் புதிய அத்தியாயம் ஒன்றின் ஆரம்பம் இது என்று வர்ணித்த பிரதமர், சீனாவுக்கான இடைநிலைப் புள்ளியாக விரைவில் இலங்கை மாறும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



இந்நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான சீனத் தூதுவர் யி ஷியான்லியாங், 'இந்த கைத்தொழில் வலயத்தில், முதலீடுகளை செய்ய விரும்பும் சீன மற்றும் ஏனைய நாடுகளின் தொழிற்றுறைகளுக்கு இந்தப் பணியகம் முக்கியமான ஒரு நகர்வாக இருக்கும்.

சாத்தியமான எல்லா தொழிற்றுறைகளையும் இந்த வலயத்துக்கு ஈர்ப்பதற்கும் எதிர்காலத்தில், இலங்கை கைத்தொழில் மயமாவதற்கும் சீனா உதவும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுதந்திர சதுக்கத்தில் 150 சீனர்களுக்கு திருமணம் செய்து வைக்கிறார் மைத்திரி



(கொழும்பு)

சீன நாட்டவர்கள் 150 பேருக்கு கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் திருமணம் நடைபெறவுள்ளது. கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

சுதந்திர சதுக்கத்தில் எதிர்வரும் டிசெம்பர் 17ஆம் திகதி இந்த பாரிய திருமண நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று, 75 சீன திருமண இணையர்களுக்கும், திருமணச் சான்றிதழ்களை வழங்குவார்.

திருமணம் முடிந்த பின்னர், அன்றிரவு பத்தரமுல்ல வோட்டர் எட்ஜ் விடுதியில் இராப்போசன விருந்து இடம்பெறும்.

மறுநாள், மூன்று குழுக்களாக சீன இணையர்கள், யால, சிகிரியா, கண்டி ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

இலங்கையின் பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு,பீஜிங்கில் உள்ள இலங்கை தூதரகம், சுற்றுலாத்துறை அமைச்சு ஆகியன இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.(இ-7)

# வேட்பு மனு ஏற்பு 27 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்லுக்கான வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும் திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளிலும் 30 ஆம் திகதியும் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

தேர்தல் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் பைஸர் முஸ்தபா கடந்த முதலாம் திகதி வெளியிட்டதனைத் தொடர்ந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# மகிந்தவுக்கு முந்திரி கொடுத்த ஐ.தே.கவின் மலிக் சமரவிக்கிரம



(கொழும்பு)

அரசியலமைப்பு மாற்றம், உள்ளூராட்சித் தேர்தல் ஏற்பாடுகள் என்று கொழும்பு அரசியல் சூடுபிடித்துள்ள நிலையில், அரசியலில் எதிர் எதிர் சக்திகளாக இயங்கும் இரண்டு கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் ஒன்றாக அமர்ந்து ரக்பி போட்டியை கண்டு களித்தனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த ரக்பி போட்டியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவும் கண்டு களித்தனர்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு அருகே, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், அமைச்சருமான மலிக் சமரவிக்கிரம அமர்ந்திருந்து போட்டியைப் பார்வையிட்டார்.

இதன்போது, மலிக் சமரவிக்கிரம முந்திரிப் பருப்புகளை, மகிந்த ராஜபக்ஷ தம்பதியருடன் இணைந்து சாப்பிட்டார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அவர்களுக்கு இல்லாத உரிமையா?

"வேறு யார் என்ன சொல்லியிருந்தாலும் நான் கவலைப்பட்டிருக்கமாட்டேன். எங்க அம்மாவே என்னைத் திட்டிட்டாங்க. அதுதான் எனக்குக் கஷ்டமா இருக்கு"

"நான் அவர் மேல எவ்வளவு மதிப்பு வச்சிருந்தேன். அவரே இப்படிப் பேசிட்டாரு. அதை நினைச்சாத்தான் எனக்கு மனசு தாங்கலை" என்றெல்லாம் தங்களுடைய அன்புக்கும் மரியாதைக்கும் உரியவர்கள் கோபித்துக் கொண்டார்கள் என்பதற்காக ரொம்பவும் மனமுடைந்து போகிறவர்கள் பலர்.

ஒரு குழந்தை திடீரென்று தன் அம்மாவின் கையை விடுவித்துக் கொண்டு வீதியின் குறுக்கே ஓடுகிறது. கார்க்காரர் திட்டிவிட்டுப் போகிறார்கள். தாய் ஓடிப் போய் அந்தக் குழந்தையின் முதுகில் நான்கு சாத்துச் சாத்துகிறாள். அல்லது கோபித்துக் கொள்கிறாள்.

கார்க்காரரின் கோபத்திற்கும்– தாயின் கோபத்திற்கும் இடையே நிறைய வேறுபாடு இருக்கிறது. அவர் சுயநலம் காரணமாகவும் அன்பு இல்லாமலும் கோபப்பட்டார். தாயின் கோபம் அப்படிப்பட்டதல்ல. பாசம் இருப்பதன் காரணமாகவும் குழந்தையின் நன்மைக்காகவும் கோபிக்கிறாள் அல்லது அடிக்கிறாள்.

வகுப்பில் ஆசிரியர் கோபித்துக் கொள்கிறார் அல்லது அடிக்கிறார். இது சுயநலத்தின் பாற்பட்டதல்ல. அக்கறையின் காரணமாக எழும் கோபம்.

வேலை செய்யும் இடத்தில் மேலதிகாரி அல்லது முதலாளி கோபித்துக் கொள்கிறார். இது அவர் மாற வேண்டும் அல்லது திருத்த வேண்டும் என்கிற எதிர்பார்ப்பில் நடக்கிறது.

இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளாமல் என்னை எல்லோரும் வெறுக்கிறார்கள். என்னிடம் அன்பு காட்ட வேண்டியவர்களே என்னைக் கோபித்துக் கொள்கிறார்கள் என்று தவறான கற்பனையில் பிடிப்பின்றியும் மனம் சோர்ந்தும் வாழ்கிறார்கள் பலர். இது ஒரு வேடிக்கையான உலகம். இந்த உலகத்திற்கு அன்பையும் பிரியத்தையும் அக்கறையையும் சரியாக வெளிப்படுத்த தெரிவதில்லை. அன்பை முரட்டுத்தனமாகத் தான் வெளிப்படுத்தத் தெரிகிறது. ஒரு பூனை தன் இரையான எலியைக் கவ்வுவதற்கும், தன் குட்டியைக் கவ்வுவதற்கும் இடையே பெருத்த வேறுபாடு இருக்கிறது. இரண்டையும் கழுத்தருகே தான் பிடிக்கிறது. இரண்டையும் பல்லால்தான் கவ்வுகிறது.

இந்த வேறுபாட்டைப் புரிந்து கொள்ள வேண்டியது குட்டியின் கடமை.

ஆக நோக்கம் என்ன என்பது தான் முக்கியமே தவிர வழிமுறை என்ன என்பதல்ல.

ஒரு மாணவன் பெயிலானால் மற்றவர்கள் சந்தோசப்படுவார்கள். தந்தை அப்படியல்ல. கோபிக்கத் தான் செய்வார். இது அக்கறையின் வெளிப்பாடே தவிர வேறல்ல.

ஒரு கருங்கல் கற்சிலையாகுமுன் படாதபாடு பட்டுத்தான் வேண்டும். நாம் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் திகழ மற்றவர்கள் நம்மைக் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்குவார்கள். இதற்கு நாம் தயாராகத்தான் இருக்க வேண்டும்.

கேள்வி கேட்போரே இல்லாமல் நாம் வளர நினைக்கிறோம். இந்த எதிர்பார்ப்பு மகாத் தவறு இது கோளாறில் தான் போய் முடியும்.

ஆக, நம்மீது அன்பு செலுத்துகிறவர்களுக்கு நம்மைக் கோபித்துக் கொள்ள 100 சதவிகித உரிமை உண்டு!

**லேனா தமிழ்வாணன்**

# அமரர் இராசநாயகத்தின் மறைவிற்கு யாழ்.வணிகர் கழகத்தின் இரங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவரும் முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருமான திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களது மறைவை அறிந்து யாழ் வணிகர் கழகம் ஆற்றொணா துயரமடைந்துள்ளது.

எமது மண்ணில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் அவர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக பணியாற்றிய காலத்திலும் பின்னர் மகாதேவா சிறுவர் இல்லத்தின் தலைவராகவும் அவர் ஆற்றிய பணிகள் மகோன்னதமானவை என்பதில் ஐயமேதுமில்லை.


போரினால் சின்னாபின்னமாகிய மகாதேவா சிறுவர் இல்லத்தை மீண்டும் புனரமைக்கும் பணிகளில் அவர் ஈடுபட்ட போது யாழ்.வணிகர் கழகத்துடன் அவர் மிகவும் நெருங்கிய உறவுகளை பேணி வந்துள்ளார்.

அவரது அயராத முயற்சியையும்வேண்டுகோளையும் கவனத்தில்கொண்டு அவர் கோரியிருந்தவாறு சுமார் 320 பெண் பிள்ளைகள் தங்குவதற்காக ஒரு விடுதியை யாழ்.வணிகர் கழகம் அமைத்துக் கொடுத்ததை இங்கு நினைவு கூர வேண்டும். இக் கட்டடம் அமைப்பதற்காக யாழ்.வணிகர் கழகம் பல தடவைகள் அமரர் இராசநாயகத்துடன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்புகளால் அவரது நற் பண்புகளையும் ஆளுமையையும் தமிழ் சமூகத்தினர்பால் அவருக்கிருந்த பற்றையும் எம்மால் அறிய முடிந்தது.

இத்தகைய பண்பாளனை ஆளுமை மிக்கதொரு நிர்வாகியை மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் இழந்துவிட்டது. அன்னாரது பிரிவினால் மேற்படி இல்லத்தில் வதியும் எமது சிறுவர்களினதும் மற்றும் பணியாளர்களினதும் துயரத்தில் நாமும் பங்குகொள்கின்றோம். இப் பிரிவினால் துயரமுற்றுள்ள அன்னாரது குடும்பத்தினர் உட்பட்ட அனைவருக்கும் யாழ்.வணிகர் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது. (இ-7)

இ. ஜனக்குமார் தலைவர்.
யாழ்.வணிகர் கழகம்

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு : 1946 05 01

இறப்பு : 2017 11 02

### அமரர் திருநாவுக்கரசு இராசநாயகம்

நெஞ்சம் கனத்திட கண்கள் குளமாகிட
கரங்கள் வலித்திட கவிதை உரைத்திட
காலமொன்று வந்தது மாமா நின் பிரிவாலே

அணைத்திட்ட கரங்கள் அமைதியாய் உறங்கிட
பணி செய்த பாதங்கள் ஓய்ந்திட
இளகிய உம் நெஞ்சு இலேசாகத் தூங்கிட
பிரிவின் வலியாலே பதைத்து நிற்கும் உம் உறவில்
நானுமோர் சிறு பிஞ்சு


யாருமற்ற குழந்தைகட்கு அம்மை அப்பனானீரே
நாதியற்ற அவர்களுக்கு எல்லாமாய் ஆனீரே
அரச அதிபர் நீர்
ஆனாலும் ஓர் சேவகனாய்
செய்த சேவையினை அப்பா கூற
கனவானின் பணி காண
கனடாவிலிருந்து நான் வந்தேன் மாமாவே

பிஞ்சுப்பாலகர் மனம் குளிர
மரத்த மனங்கள் புன்னகைத்திட
கனத்த கண்கள் கண்ணீரை மறந்திட
பசித்த வயிறு குளிர்ந்திட
நடுங்கும் உடல்கள் பதட்டம் நீங்கிட
பணிபுரிந்தீர் மெய்சிலிர்த்தேன்
நின் பணி கண்டு மாமாவே

வரலாற்றின் பதிவினிலே வாழுகின்றீர் -உம் பணியாலே
வாழ்ந்திடுவோம் உம் பணி தொடர்வோர் வரிசையிலே - என
இந்நாளில் உரைக்கின்றேன் உறுதியுடன்.
மீளாத்துயில் கொள்ளும்
நின் ஆன்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றேன்.

Miss.J.Sagana
New Lovers Corner
Kilinochchi &, Jaffna T.P- 0769388052

(1228)



வடமராட்சிக்கிழக்கு மணற்காடு றோ.க.த.க. பாடசாலை வளாகம் பெரும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது. வடமராட்சிப் பகுதியில் சில தினங்களாக கடும் மழை பொழிந்து வருகின்றது. இதனால் பல இடங்களில் வெள்ளம் காணப்படுகின்ற போதிலும் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை வளாகம் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகிறது. இப்பாடசாலையானது கடந்த வருடமே புதிய இடத்திற்கு இடமாற்றப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-மகாலிங்கம்)

# ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்களை தடைசெய்ய வேண்டும்

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஜனாதிபதியிடம் கோரிக்கை




(கொழும்பு)


ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் தடை செய்யப்பட வேண்டுமென கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளார். கொழும்பு ஜோசப் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கத்தோலிக்க ஆசிரியர் தின நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதனை தடை செய்யுமாறு தாம் ஜனாதிபதியிடம் எழுத்துமூலம் கோரியதாகத் தெரிவித்துள்ளார். ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதனால் மாணவர்கள் அறநெறி வகுப்புக்களுக்கோ, மத வழிபாட்டுத் தளங்களுக்கோ செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மிகவும் சிறிய மாணவ மாணவியரும் நீண்ட நேரம் தனியார் வகுப்புக்களுக்கு சென்று வீடு திரும்புவதனை தாம் பார்த்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். தமது காலத்தில் பாடசாலை முடிந்ததும் நேரடியாக விளையாட்டு மைதானம் செல்வோம் எனவும் தற்போதைய பிள்ளைகள் நேரடியாக தனியார் வகுப்புக்களுக்கு செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நல்லூர் வீதி புகையிரதக் கடவையை அண்டிய 8 குடும்பங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட செயலகத்தை அண்டிய கச்சேரி நல்லூர் வீதி புகையிரதக்கடவையை அண்டிய 8 குடும்பங்களை சேர்ந்தவர்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதி கிணறுகளிலும் வெள்ளம் புகுந்ததால் குடிதண்ணீர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்படி சூழ்நிலையை இப்பகுதி மக்கள் கடந்த 2 வருடங்களாக அனுபவிக்கின்றனர்.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், மாநகர சபை சுகாதார பரிசோதகர், புகையிரத நிலையம் போன்றவற்றில் கோரிக்கை விடுத்தும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. (இ-7)

# சொந்த ஊருக்கு வந்த மூதாட்டி மாரடைப்பால் மரணமானார்

(கரணவாய்)

வெளிநாட்டிலிருந்துசொந்த ஊரைப் பார்ப்பதற்காக வந்த மூதாட்டி ஒருவர் மாரடைப்பால் மரணமான சம்பவம் பருத்தித்துறை வத்தளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஜேர்மனியில் வசித்து வந்த 80 வயது மூதாட்டி தனது சொந்த ஊரைப் பார்ப்பதற்காக கடந்த மாதம் வத்தளைப் பகுதிக்கு வந்துள்ளார்.

இங்கிருந்து மீண்டும் ஜேர்மனிக்கு திரும்பிச் செல்ல இருந்த மூதாட்டி நேற்று முன்தினம் முற்பகல் மாரடைப்பால் மரணமானார்.(இ-60)

# வாகனங்கள் மோதி விபத்து



(கரணவாய்)

வடமராட்சி வல்லைப் பகுதியில் கடந்த 3ஆம் திகதி மாலை 5.மணியளவில் வாகனங்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு வாகனங்களும் பலத்த சேதத்திற்குள்ளாகின. மழை பெய்து கொண்டிருந்த போது இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. (இ-60)

# சிறந்த சமூகப் பணியாளன் அமரர் இராசநாயகம்

அதிகாலையில் எனக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களில் ஒன்று பெரும்பாலும் அமரர் இராசநாயகம் அவர்களுடையதாக இருக்கும். அத்தொலைபேசி உரையாடல் ஞானம் நிறுவனத்தினூடாக எமது தொல்லியல் ஆய்வுக்கென வாகனம் ஒன்றை நன்கொடையாக வழங்குவதற்கு தான் செய்துள்ள ஏற்பாடு பற்றியதாகவே இருக்கும். ஆனால் இன்று அதிகாலை வந்த தொலைபேசியை ஆவலோடு எடுத்த எனக்கு இராசநாயகம் ஐயா நேற்றிரவு அமரத்துவம் அடைந்துவிட்டார் என்ற சோகச் செய்தியே கிடைத்தது. இச்செய்தி தமிழ் மக்கள் மலையென நம்பியிருந்த ஒரு சமூக வழிகாட்டியை இழந்த பேரிடிச் செய்தியாக இருந்தது. அமரர் இராசநாயகம் அவர்களுடன் எனக்குள்ள உறவு 27 ஆண்டுகளைக் கடந்தது. தொண்ணூறுகளின் முற்பகுதியில் நாம் இருவரும் சங்குப்பிட்டிப் பாலத்தில் எதிர்பாராமல் சந்தித்த போது அமரர் இராசநாயகம் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் பதவியை அலங்கரித்துக் கொண்டிருந்த ஒருவர். ஆனால் அச்சிறிய பதவியின் மேதா விலாசத்துடன் அமரர் அப்பிரதேச மக்களின் விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில், கல்வி, சுகாதாரம், பண்பாடு, சமூக ஒழுக்கம் என்பவற்றின் மேம்பாட்டிற்காக கொண்டு வந்த திட்டங்களும், அத்திட்டங்களால் அடையப்பெற்ற நன்மைகளும் அளப்பரியனவாக இருந்தன.

சமூகப் பணி என்பது அமரர் இளமையில் கற்றுக் கொண்ட முதன்மைப் பாடம் என்றே கூறலாம். அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்குத் தெரியும் வன்சொல் பயன்படுத்தாத அமரரின் பேச்சுக்களும், செயற்பாடுகளும் தமிழ் மக்களின் நலன் சார்ந்ததாகவே இருந்திருக்கும். இருபது வயதில் பல்கலைக்கழக மாணவனாக இருந்து தொடங்கிய அவரின் சமூகப் பணிகள் எழுபது வயதைத் தாண்டிய நிலை யிலும் இருபது வயது இளைஞனுக்குரிய துடிப்புடன் தொடர்ந்ததை நாம் அறிவோம். இதற்கு அமரர் பூநகரி பலநோக்குக் கூட்டுற வுச் சங்கத் தலைவராக, உதவி அரசாங்க அதிபராக, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக, மகாதேவ ஆச்சிரமத்தின் தலைவராக இருந்து ஆற்றிய அளப்பெரிய பணிகளை உதாரணங்களாக நினைவுபடுத் திக் கொள்ளலாம். அமரர் இராசநாயகம் அவர்கள் நாட்டில் அசாதாரண சூழ்நிலை தீவிரமடைந்த காலகட்டத்தில் புலமைப்பரிசில் பெற்று மேற்படிப்பிற்காகப் பிரித்தானியா சென்ற போது அவருடன் மேலும் சிலரும்



சென்றிருந்தனர். அவர்களில் பலர் தமது மேற்படிப்பு முடிந்ததும் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளைக் காரணம் காட்டி அந்நாட்டில் நிரந்தர குடியுரிமை பெற்ற போது இருவர் மட்டும் சொந்த மக்களுக்கு பணி செய்யும் நோக்கில் இலங்கைக்குத் திரும்பினர். அவர்களில் ஒருவர் அமரர் இராசநாயகம் என்பதை இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்வது அமரர் தனது மக்களுக்குப் பணி செய்வதில் கொண்டிருந்த ஈடுபாட்டிற்குச் சிறந்த சான்றாகும்.

அமரர் இராசநாயகம் அவர்கள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரகப் பணியாற்றிய காலத்தில் வடமாகாண அபிவிருத்திக்காகப் பல திட்டங்களைக் கொண்டு வந்தார். அவற்றுள் ஒன்றே மன்னார் - வவுனியா வீதியில் அமைந்த தேக்கம் அணைக்கட்டாகும். இவ்வணைக்கட்டை வட இலங்கையின் முதன்மைச் சுற்றுலா மையங்களில் ஒன்றாக மாற்றியமைக்கும் நோக்கில் இவ்வணைக்கட்டை மீளுருவாக்கம் செய்தல், தொங்கு பாலத்தை நவீனமயப்படுத்தல், அணைக்கட்டின் சுற்றாடலில் அமைந்துள்ள காடுகளை அழித்து புதிய குடியிருப்புக்களை ஏற்படுத்தல், சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகளை அமைத்தல், பிரதான வீதியிலிருந்து அணைக்கட்டுக்கு புதிய வீதியை உருவாக்கல் என்பவற்றை உள்ளடக்கிய திட்டவரைபைக் கொண்டிருந்தது.

தனது ஓய்வுக்காலத்திலும் தனது பணி சமூகத்திற்கு பயன்படவேண்டும் என்பதற்காக மகாதேவ ஆச்சிரமத்தின் தலைவராக இருந்து நலிவடைந்த எமது பிள்ளைகளுக்கு ஒளிம யமான எதிர்காலம் உருவாக்க அரிய பணிகளை ஆற்றினார். அவற்றுள் மகா தேவ ஆச்சிரமத்தை சொத்துடைய பலமான நிறுவனமாக மாற்றியமைத்தமை அமரரின் ஆளுமைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அமரர் அதிகாரத்தில் இருந்த போதும் மூப்பு இளமை பாராது, பட்டம் பதவி நோக்காது அனைவருடனும் அன்பாகப் பேசும் பண்பும், வன்சொல் பயன்படுத்தாத நடத்தைச் சுபாவமும், ஆன்மீக ஈடுபாடும், சமூக நலன்கள் பற்றிய சிந்தனையும், செயலும் அமரரை எல்லோரும் மதிக்கக் காரணமாக இருந்தன.

பேராசிரியர் வி.பி. சிவநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியாக இருந்த காலத்தில் நாம் பீடச் சபையின் வெளிவாரி உறுப்பினராக அமரர் இராசநாயகம் அவர்களின் பெயரை முன்மொழிந்த போது சபை அங்கத்த வர்கள் மாற்றுக் கருத்தின்றி அமரரின் பெயரை அங்கீகரித்த நிகழ்வு இன்னும் எமது நினைவில் உள்ளது.

இது அமரர் மீது எமது பல்கலைக்கழக சமூகம் கொண் டிருந்த நம்பிக்கையையும், மதிப்பையும் எடுத்துக்காட்டுகின்றது. பொது நிகழ்வுக ளில் நிமிர்ந்த நடையுடனும், புன்சிரிப் போடும் கலந்து சிறப்பிக்கும் அப்பெரியவர் இன்று எம்மைவிட்டுச் சென்றாலும் அவரால் வளர்ந்தவர்கள் அவர் காட்டிய புதுவழி யைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எம்மோடு கூடிவாழ்ந்த ஒருவர் எம்மை விட்டுப் பிரியும் போது அதற்கான அனுதாபத்தை யாரிடம் தெரி விப்பது என்ற வினா எழும் போது அதை நமக்கு நாமே தெரிவிக்க வேண்டும் என்ற உண்மை தெரிகிறது. அமரரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டு வோமாக.

சிரேஷ்ட பேராசிரியர்
ப.புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அஞ்சலிச் செய்தி

தி. இராசநாயகத்தின் மறைவு கேட்டு மனம் துன்புற்றது. அவருடைய உடல் நலம் சீரற்றதாக இருந்தமை பற்றி அறிந்திருந்தபோதிலும் அவருடைய தன்னலமற்ற தொண்டு துன்புறுத்தாமல் இருந்தது. ஆனால் இப்போது அவர் காலத்துடன் கலந்துவிட்டார்.

இராசநாயகத்துடன் நாம் பல ஆண்டுகளாகத் தொடர்புற்றுள்ளோம். அவருடைய மனதநேயப் பண்பினை அறியாதவர் யாருமிலர். மக்களுக்கான தொண்டுப் பணிகளைச் செய்வதிலே மகிழ்வும் நலமும் அடைந்தவர் அவர். அவருடைய பயனுள்ள செயற்பாடுகளையும் தன்னலமற்ற அரச பணிகளையும் தொண்டுப் பணிகளையும் நன்கு நோக்கி யாழ்ப்பாண மாநகர சபை மிகப் பொருத்தமான முறையிலே யாழ். விருதினை வழங்கி அவருக்கு உயர் சிறப்பினை வழங்கிச் சிறப்புச் செய்தது.

அவருடைய அரச பணிகளைவிட தாய் தந்தை இல்லாத, வறுமைக்கோட்டுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளைப் பொறுப்பெடுத்து உதவும் கரமாக இருந்து பணி ஆற்றியமையே சிறப்பானது. மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லம் அமரர் இராசநாயகத்தின் பெயரை நிலைநிறுத்துவதாகவே உள்ளது. இராசநாயகத்தின் மகளை நாம் கனடாவில் கண்டோம். தந்தையாரைத் தங்களுடன் வந்து இருக்கும்படி பல தடவை கேட்டும் அவர் வரவில்லை என்று கூறினார். காரணம் அவர் நடத்தி வரும் மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லமேயாகும். தாய், தந்தையரில்லாத குழந்தைகளுக்கு உதவும் கரமாகத் தான் இருக்க வேண்டிய தேவையினை அவர் தங்களுக்கு கூறி வருகிறார் என்று அந்த மகள் கூறியதை நாம் நன்கு விளங்கிக் கொண்டோம். ஏனெனில் நாங்களும் பல ஆண்டுகள் அவ்வாறான உதவும் கரங்களாக இருந்தோம். அதனால் அவருடைய மனநிலையை நன்கு உணரக் கூடியதாயிருந்தது.

அன்னாரின் ஆன்மா ஆடவல்லானின் திருவடிகளிலே அமைதிபெற இறையருளை வேண்டுகிறேன்.

தகைசார் பேராசிரியர்
அ. சண்முகதாஸ்

## இந்து மாமன்றத்தின் கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமாகிய கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமத்தினால் நடத்தப்பட்டு வந்த மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தின் தலைவராகவும் அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினராகவும் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபையின் முன்னை நாள் உபதலைவராகவும் தற்போது பேரவை உறுப்பினராகவும் திகழ்ந்த முன்னைநாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாம் மிகுந்த வேதனையும் அதிர்ச்சியுமடைகின்றோம்.

அமரர் இராசநாயகம் அவர்கள் அரச அதிபராக பதவிவகித்த மிக நெருக்கடியான யுத்தகாலத்தில் தமிழ் மக்களுக்கு தோளோடு தோள்நின்று தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் ஆற்றி அம்மக்களின் மனதில் நீங்காத இடம்பிடித்திருந்தார். தனது பணிக்காலம் நிறைவுற்று முதுமையடைந்தாலும் அன்னார் ஆற்றிவந்த தொண்டு அவரின் முழுமையான அர்ப்பணிப்புடன் இருந்து வந்தது. கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்தின் தலைவராகவும் தொண்டாற்றி இல்லச் சிறுவர்களின் சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்து தன்னை வாட்டிய நோயையும் பொருட்படுத்தாது தொண்டாற்றிய ஒர் உத்தமர்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம் என அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சாணக்கிய தலைமைத்துவத்தின் அடையாளமாய் இராசநாயகம்

### சிறிதரன் எம்.பி.இரங்கல்

பூர்வீக வரலாற்று மண்ணாகிய பூநகரியில் பிறந்து கிளிநொச்சி மண்ணின் பல்துறை ஆளுமையின் அடையாளமாக திகழ்ந்த உயர்திரு திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் சிவபதப்பேறு பெற்றமை அறிந்து ஆழ்ந்த துயருற்றோம்.

ஐயாவின் வாழ்வு முழுமையும் கிளிநொச்சி மாவட்ட வளர்ச்சியோடும் வரலாற்றோடும் பிணைந்து இருந்தது. வயற்புலப்பண்பாண்டின் அடித்தளத்திலிருந்து கட்டமைக்கப்பட்ட கிளிநொச்சியின் பல்துறைசார் வளர்ச்சியில் இராசநாயகம் ஐயாவின் பங்கும் பணியும் அளப்பரியது.

"அர்ப்பணித்தல்" என்னும் உயரிய தத்துவத்தை தனது வாழ்வியல் முழுவதும் வெளிப்படுத்தி வாழ்ந்த உத்தமர் அவர். அவரது வளர்ச்சிப் பாதையின் ஒவ்வொரு தடங்களிலும் அவர் எதிர் கொண்ட சவால்களை சாத னைகளாக்கிய செயல்வீரனாக திகழ்ந்தார். தன்னைச் சூழ்ந்திருந்த வறுமை எனும் நச்சு வட்டத்தை அறிவு, உழைப்பு என்னும் தேடல் களினால் உடைத்து உயர்ந்த உன்னதமானவர்.

திட்டமிடல் சேவையின் முன்னோடியாக விளங்கிய அவர் கிளிநொச்சி நகரை திட்டமிட்டு வடிவமைக்க வேண்டும் என கண்ட கனவுகளும் அதற்காக உழைத்த திடமும் வரலாற்றின் பதிவாகும்.

அறிவியல்நகர் உருவாக்கம் அவர் ஆற்றிய அத்தகைய பணிக்கு சாட்சியமாகத் திகழ்கிறது. கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் மற்றும் இராணுவத்தால் இடித்தழிக்கப்பட்ட கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம் என்பவை இராசநாயகம் ஐயா அவர்களின் சிந்தனையில் உருப்பெற்றவை.

தீவிரமான போர்முனைகள் சூழ்ந்திருந்த அக்காலத்தில் உணவுத்தடையை அரசு விதித்திருந்தது. பல்வேறு சவால்கள், அழுத்தங்கள், தன்முன்னே இருந்த போதும் இரண்டு தடவைகள் அரசாங்க அதிபராக பொறுப்பேற்கத் துணிந்தமை அவரது அபார மான தன்னம்பிக்கையின் வெளிப்பாடாகும். குறிப்பாக, புலிகளுக்கு உணவைக் கொண்டு போய்கொடுக்கிறாயா? என பாதுகாப்பு உயர்பீடம் அச்சுறுத்திய போது "தாய்க்கு கொடுக்கும் நிவாரணத்தில் அந்த தாய் தனது புலிப்பிள்ளைக்கு உணவளித்தால் நான் என்ன செய்ய முடியும். அதற்காக முழு மக்களையும் பட்டினி போட்டு கொல்ல வேண்டாம்" என வாதாடிய மக்கள் நல அதிகாரியாக எங்கள் மனங்களில் இருக்கிறார்.

சைவத்தின் மீதும் தமிழின் மீதும் அளவற்ற பற்றுடைய இராசநாயகம் ஐயா உருத்திரபுரீச்சர சிவாலயத்தின் தலைவராக இருந்த போது வரலாற்றின் அபகரிப்பு ஒன்றிலிருந்து அவ்வாலயத்தையும் அம்மண்ணையும் பாதுகாத்தவர் என்பது பதிவு செய்யப்பட வேண்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாக 2009 ஆம் ஆண்டு பிற்பாடு பேரவலமும் பெருவலியும் சுமந்து நிராதரவாய் நின்ற எம் தேசக் குழந்தைகளை மகாதேவ சைவச் சிறுவர் இல்லத்தில் அரவணைத்து ஆயிரம் ஆயிரம் பிள்ளைகளின் வாழ்வில் ஒளியூட்டிய தந்தையாக ஐயா இருந்தார்.

இராசநாயகம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரின் துயரால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், மகாதேவா சைவச் சிறுவர் இல்லக்குழந்தைகள் அவர் மீது அன்பும் அபிமானமுடைய அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவஞானம் சிறிதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

# சைட்டம் மீதான வெறுப்பு இன்னும் அடங்கவில்லை

## இன்று உண்ணாவிரதம்



(கொழும்பு)

தமது பெற்றோர்களின் உயிர்களைப் பலிக்கடா வாக்காமல் வைத்திய பீட மாணவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை வழங்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி சைட்டம் எதிர்ப்பு மக்கள் பேரணி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டமொன்று நேற்று அநுராதபுர நகரின் பேருந்து தரிப்பு நிலையத்தில் இடம்பெற்றது.

இன்று 6 ஆம் திகதி முதல் தெரிவு செய்யப்பட்ட பல இடங்களில் பாரியளவு மக்கள் பங்களிப்புடன் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் வைத்திய பீட மாணவர்களின் பெற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ஆர். ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரச பல்கலைகளில் மருத்துவ பீடங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் கடந்த 10 மாத காலமாக விரிவுரைகளைப் புறக்கணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நல்லாட்சியின் பண்பு இதுதான்

## ஜனாதிபதி மகிழ்ச்சி



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தில் குற்றமிழைப்பவர்களுக்கு எதிராக எந்தவித கட்சி பேதங்களும் இன்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு தண்டனையும் வழங்கப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதுதான் இந்த நல்லாட்சியின் ஒரு பண்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். தீர்மானங்களை எடுக்கும் போது ஆணைக்குழுவின் அதிகாரிகள் எந்தவித அழுத்தங்களும் இன்றி செயற்பட்டு வருவதாகவும் எலஹர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார். (இ-7)

## சந்தையிலுள்ள இறைச்சி வகையின் பயன்பாடு குறித்து மக்கள் அவதானம்


அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக பல்வேறு நோய்களுக்குட்பட்ட மிருகங்கள் இறைச்சிக்காக சந்தைக்கு வழங்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரச மிருக வைத்தியர்கள் சங்கம் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக அறுப்பதற்காக கொண்டு செல்லப்படும் மாடு, ஆடு, பன்றி போன்றவற்றுக்கு கடந்த பல வாரங்களாக சுகாதார சான்றிதழ் விநியோகிக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனால், உணவுக்காக சந்தையில் வைக்கப்பட்டுள்ள கால்நடை இறைச்சி வகைகளின் சுகாதாரத் தன்மை சந்தேகத்துக்குரியதாக மாறியுள்ளதாகவும் அரச மிருக வைத்தியர் சங்கத்தின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

## டாக்டர் நிரஞ்சன் ஆஸி பயணம்

(கொழும்பு)



கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்கள கொள்கை வகுத்தல் மற்றும் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் மகாதேவன் நிரஞ்சன் இலங்கையின் "சிடா" நிறுவனத்தின் அனுசரணையுடன் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் புலமைப் பரிசில் பெற்று அவுஸ்திரேலியா பயணமானார்.

"இலங்கையின் நிலையான அபிவிருத்தியும் தனியார் துறையின் பங்களிப்பும்" எனும் விடயம் சார்பாக அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் உள்ள மொனாஸ் பல்கலைக்கழகத்தின் இரண்டுமாத கால ஆய்வை மேற்கொள்ளவுள்ள டாக்டர் நிரஞ்சன், பயிற்சி நிறைவில் மேற்படி விடயம் சார்பாக கொள்கை வரைபு ஒன்றினை இலங்கை அரசிடம் கையளிக்க வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பில் டுபாகோ தீவுகளுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பில் ட்ரினிடாட் என்ட் டுபாகோ தீவுகளுடன் இலங்கை அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குவோர் தொடர்பிலான தகவல்களை திரட்டுவதற்கு இரு நாடுகளும் பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளது.

இரு நாடுகளினதும் நிதி புலனாய்வுப் பிரிவிற்கு இடையில் தொடர்புகளை பேணும் நோக்கில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. ட்ரினிடாட் என்ட்டுபாகோ தீவுகளுடனும் கியூபாவுடனும் பயங் கரவாத எதிர்ப்பு தொடர்பில் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1241

Search for people, places and things | Nagendram Home

### கவி




### யாழினி





### தயா





### ஹரி




### நிரோ




### துர்க்கா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கீசாவின் பெரும் பிரமிட்டுகளின் புதிய மர்மங்கள்

மனிதனின் தாகம் எதற்கும் அடங்காதது. காலம் அதற்கு என்றும் தடையாக இருந்ததில்லை. இருக்கவும் முடியாது. ஆனாலும் எல்லாவற்றையும் அமைதியாக கடந்து செல்வதும், தனக்கான தருணத்தில் அனைத்தையும் விழுங்கி விடுவதிலிருந்தும் அது என்றும் தவறியதில்லை. பூமியின் இந்த பகுதியில் மட்டும் காலம் 4500 ஆண்டுகளுக்கு முன்னே நின்று விட்டதை போல ஒரு பிரம்மை. 4500 ஆண்டுகளின் பின்னர் கூட தனக்குள் ஆயிரம் மர்மங்களை ஒளித்து வைத்துள்ளது எகிப்தின் கீசாவின் பெரும் பிரமிட்டு (Great Pyramid of Giza). கீசாவின் பெரும் பிரமிட்டானது கீசா சமவெளியில் உள்ள பிரமிட்டு தொகுதியில் உள்ள பிரமிட்டுகளில் பெரியதாகும். புகழ்பெற்ற ஸ்ஃபிங்ஸ் சிலையும் கீசா பிரமிட்டு தொகுதியின் ஒரு அங்கமாகும். கீசாவின் பெரும் பிரமிட்டானது கிட்டத்தட்ட 3800 ஆண்டுகளாக மனிதனால் கட்டப்பட்ட உலகின் உயரமான கட்டமைப்பாக விளங்கியது.

அண்மையில் சர்வதேச விஞ்ஞானிகளின் குழுவொன்று இன்னும் திறக்கப்படாத கிட்டத்தட்ட 30மீ நீளமுள்ள வெற்றிடம் ஒன்றினை கண்டறிந்துள்ளது. எகிப்தின் கெய்ரோ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தினை மையமாகக் கொண்டு ஜப்பான், எகிப்து, பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகளின் குழு ஒன்று கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் நவீன தொழில் நுட்பங்களின் உதவியுடன் பிரமிட்டுகளின் உட்கட்டமைப்புகளை ஆய்வுசெய்யும் பொருட்டு "ScanPyramids" எனும் செயற்றிட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது. பிரமிட்டு கட்டுமானங்களின் அறியப்படாத பகுதிகளை அவற்றிற்கு பாதிப்பு ஏற்படாத முறைகளால் (noninvasive methods) கண்டறிவதே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். பல்லாயிரம் தொன் நிறையுள்ள சுண்ணாம்புக் கற்பாறைகளாலும் கிறனைட் கற்களாலும் கட்டப்பட்ட 145 மீ உயரமும் (தற்போது 139 மீ) 230 மீ பக்க நீளமுள்ள சதுர அடிப்பரப்பையும் கொண்ட கீசாவின் பெரும் பிரமிட் கட்டமைப்பு அன்றைய எகிப்தின் பேரரசனான குஃபு (Khufu) மன்னனின் உடலினை அடக்கம் செய்வதற்காக கி.மு. 2580-2560 காலப்பகுதியில் கட்டப்பட்டதாகும்.

படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இதுவரை வெளிப்படுத்தப்பட்ட கீசாவின் பெரும் பிரமிட்டின் உட்கட்டமைப்பு 4 முக்கிய பகுதிகளை கொண்டது. கிராண்ட் கலரி (Grand Gallery), அரசனின் அறை (King's chamber), அரசியின் அறை (Queen's chamber) மற்றும் முழுமையாக கட்டப்படாத நிலக்கீழ் அறை என்பனவே அவை. பிரமிட்டின் பிரதான நுழைவாயிலானது அதன் வடக்கு முகத்தில் நிலமட்டத்தில் இருந்து சுமார் 17 மீ உயரத்தில் அமைந்துள்ளது. தற்போது சுற்றுலாப்பயணிகள் பயன்படுத்தும் நுழைவாயிலானது திருடர்களின் குகை அல்லது அல் மமுன் குகையென அழைக்கப்படும் அப்பாஸிய மன்னன் காலிஃப் அல் மமூன் (Caliph al-Ma'mun) இனால் கி.பி. 820 அளவில் தோண்டப்பட்ட பாதையே ஆகும்.

பிரமிட்டின் பிரதான நுழைவாயிலில் இருந்து அதன் உட்கட்டமைப்பிற்குச் செல்லும் குகைவழியானது கிடைமட்டத்திற்கு கீழாக 26°30' சாய்வில் 1 மீ அகலம் மற்றும் 1 மீ உயரத்தில் உள்ளது. எனினும் இதன் வெளிவாயிலானது முற்றாக அடைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் (2016 ஒக்டோபர்) பிரதான நுழைவாயிலை ஒட்டி கிடைமட்டத்திற்கு சமாந்தரமாக 1-3 மீ உயரமும் 1-2 மீ அகலமும் உடைய வெற்றிடம் ஒன்று கண்டறியப்பட்டது. இவ்வெற்றிடமானது பிரமிட்டின் வடக்கு முக வாசலில் இருந்து 2 மீ. அகலமுள்ள பாறைகளால் மூடப்பட்டுள்ளது. இவ்வெற்றிடமானது வடக்கு முக மண்டபம் (north face corridor) என பெயரிடப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே விஞ்ஞானிகள் இதுவரை அறியப்படாத வெற்றிடம் ஒன்றினை கண்டறிந்துள்ளனர். புதிய வெற்றிடமானது கிராண்ட் கலரியின் நேர் மேலே கிட்டத்தட்ட 8 மீ உயரமும் 2 மீ அகலமும் 30 மீ நீளமும் உள்ள ஒரே கட்டமைப்பாகவோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டமைப்புகளின் தொகுதியாகவோ இருக்கலாம் என கணக்கிடப்பட்டுள்ளது. இதன் அகல உயரங்கள் கிராண்ட் கலரியின் அகல உயரங்களை ஒத்துள்ளதோடு நீளமானது கிராண்ட் கலரியின் நீளத்தினை (47 மீ) விட சற்று குறைவாக உள்ளது.

இவ்வெற்றிடமானது மியூஒன் (Muon) துணிக்கைகளின் துணையுடன் கண்டறியப்பட்டுள்ளது. மியூஒன்கள் இலத்திரன்களை போல எதிரேற்றம் பெற்ற உப அணுத் துணிக்கைகளாகும். ஆனால் இவை இலத்திரன்களை போல 207 மடங்கு திணிவுள்ளவை. இவற்றின் உயர் திணிவு காரணமாக பாறைகளினூடாக நூற்றுக்கணக்கான மீற்றர்கள் பயணம் செய்யக் கூடியவை. வைத்தியர்கள் X கதிர்களை (X-rays) கொண்டு உடலின் உட்புறம் உள்ள உறுப்புகளை பார்ப்பது போல மியூஒன் துணிக்கைகளை கொண்டு பிரமிட்டுகளை போன்ற பெரும் கட்டமைப்புகளின் உட்புறத்தினை அவதானிக்க முடியும். X கதிர் படங்கள் எடுக்கப்படும்போது X கதிர்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டு உடற்பாகங்களினூடு செலுத்தப்படும். ஊடுகடத்தப்பட்ட X கதிர்கள் உணரும் பொறிமுறை ஒன்றின் மூலம் படமாக்கப்படுவதன் மூலம் உடலின் உட்பாகங்களை அறிந்து கொள்ளலாம். ஆனால் மியூஒன் துணிக்கைகள் இயற்கையிலேயே காணப்படுவதால் அவற்றை உணரும் பொறிமுறையே போதுமானதாகும்.

பூமியின் வளிமண்டலத்தை புற விண்வெளிக் கதிர்ப்புகள் (குறிப்பாக கொஸ்மிக் கதிர்கள்) தாக்கும் போது மியூஒன் துணிக்கைகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிமிடமும் கிட்டத்தட்ட 10000 மியூஒன் துணிக்கைகள் புவிமேற்பரப்பின் ஒவ்வொரு சதுர மீற்றர் பரப்பிலும் விழுகின்றன. இவற்றினை உணரக் கூடிய உணர் படலங்கள் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டுள்ளன. பிரமிட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இம் மியூஒன் உணர்படலங்களை வைத்து அவற்றில் பெறப்பட்ட மியூஒன் துணிக்கைகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். பாறைகளின் ஊடாக செல்லும் மியூஒன் துணிக்கைகள் வெற்றிடம் ஒன்றினை தாண்டும் போது அவற்றின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படும். அதாவது மியூஒன்கள் வெற்றிடம் ஒன்றினை தாண்டும் போது எதிர்பார்த்த அளவினை விட அதிக எண்ணிக்கையான மியூஒன்கள் உணர்படலங்களை வந்தடையும். அவற்றினை அவதானிப்பதன் மூலம் பாறைகளின் ஊடே உள்ள வெற்றிடங்களை அவதானிக்க முடியும். இம் முறையிலேயே விஞ்ஞானிகள் மேற்குறித்த வெற்றிடத்தினை கண்டறிந்துள்ளனர். அரசியின் அறை மற்றும் அல் மமூனின் குகை வழியில் வைக்கப்பட்ட மியூஒன் உணர்படலங்களின் மூலம் பிரமிட்டின் மேற்பரப்பினூடு வந்தடையும் மியூஒன் துணிக்கைகளை கடந்த ஓராண்டு காலம் தொடர்ச்சியாக அவதானித்து பெற்ற முடிவுகளின் படியே இவ் வெற்றிடங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. முதலில் கண்டுபிடிக்கப்பட்ட வடக்கு முக மண்டபமும் புதிய பரிசோதனை முடிவுகளில் தெளிவாக அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய வெற்றிடமானது தற்செயலானதாக இருக்க முடியாது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆனாலும் இவ்வெற்றிடத்தின் உள்ளே உள்ளவைகள் பற்றி இன்னும் அறியப்படவில்லை. இவ் வெற்றிடமானது பிரமிட்டின் இரகசிய அறையாக இருக்கலாம் எனவும் இது வெறுமனே ஒரு வெற்றிடம் எனவும் இரு வேறு கருத்துகளை வரலாற்று ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

வெற்றிடமானது கிராண்ட் கலரியின் நேர் மேலே கண்டறியப்பட்டுள்ளதால் இது கிராண்ட் கலரியினை மேலதிக பாரத்தில் இருந்து பாதுகாப்பதற்கான கட்டமைப்பாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. இதே போன்ற 5 அடுக்கு வெற்றிடங்கள் அரசனின் அறைக்கு மேலே கண்டறியப்பட்ட போதிலும் அவை புதிய வெற்றிடத்தினை போல பெரியவை அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளரான கலாநிதி. MarkLehner இன் கூற்றுப்படி இது ஒரு புதைகுழியாக இருக்க முடியாது. ஒரு உடலினை புதைப்பதற்கான சிறந்த இடமாக புதிய வெற்றிடம் இருக்க முடியாது என்பது அவரின் வாதம்.


இவ்வெற்றிடத்தினை அடையும் வழிகள் ஏதும் கண்டறியப்படவில்லை. அதுவரை இவ் வெற்றிடமானது சாதாரணமான வெற்றிடமா? அல்லது ஒரு இரகசிய அறையா? என்பது மர்மமாகவே இருக்கும். புதிதாக கண்டறியப்பட்ட வெற்றிடத்திற்கும் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட வடக்குமுக மண்டபத்திற்குமான தொடர்புகள் பற்றி புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இவற்றிற்கிடையேயான தொடர்புகள் மற்றும் இந்த இரு வெற்றிடங்களை இணைக்கும் குகை வழி என்பவற்றுக்கான சாத்தியங்கள் பிரகாசமாகவே உள்ளன. ஏனெனில் பிரமிட்டின் பெரும்பாலான குகைவழிகள் மியூஒன் உணர்படலங்களினால் கண்டுபிடிக்க முடியாத அளவு சிறியவை.

இக்கட்டமைப்புகளை அடையும் வழிமுறைகள் பிரமிட்டின் ஒட்டுமொத்த கட்டுமானத்தையே சீர்குலைக்க கூடும் என்பதால் அவ்வறையினை திறக்கும் முயற்சிகளில் ஈடுபடப்போவதில்லை என எகிப்திய அரசு தெரிவித்துள்ளபோதிலும் இவ்வறை பற்றிய மேலதிக ஆய்வு முயற்சிகளை வரவேற்றுள்ளது. இருப்பினும் இவ்வெற்றிடங்கள் எமக்கு தரப்போகும் ஆச்சரியங்களுக்காக நாம் அதிக காலம் காத்திருக்க தேவையில்லை என்பதே உண்மை.

உசாத்துணைகள்.

இவ்வாய்வானது புகழ்பெற்ற நேச்சர் சஞ்சிகையின் 2017 கார்த்திகை மாதப் பதிப்பில் வெளிவந்துள்ளது. மூலப்பிரதியினை கீழுள்ள இணைப்பில் காணலாம்: https://www.nature.com/articles/nature24647


ScanPyramids mission பற்றிய தகவல்களை கீழுள்ள இணைப்பில் காணலாம்: http://www.scanpyramids.org/




பிரமிட்டின் உட்கட்டமைப்பு (பயன்படுத்தப்பட்டுள்ள படமானது (Scan Pyramids Mission ) இனால் உருவாக்கப்பட்டதாகும்

தணிகைச்செல்வன் முருகதாஸ்
விரிவுரையாளர்
பௌதிகவியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

# மருத்துவகுணம் மிகு நாவல் (syzygiumcumini)



| | |
|---|---|
| Order | :Myrtales |
| Family | :Myrtaceae |
| Genus | :SyzygiumP.Br.exGaertn |
| Species | :SyzygiumcuminiSkeels |

நாவல் மரம் ஒரு பசுமை மாறாத வெப்பமண்டலப் பகுதிக்குரிய ஒருமரமாகும். இது நாகப்பழமரம், சரிதலம், ஆருகதம் எனவும் ஆங்கிலத்தில் ஜாமன், கறுப்புபிளம்ஸ், கறுப்பு செர்ரி, ஜம்பலம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது.

ஆண்டுக்கு ஒருமுறை தை.மாசி மாதங்களில் இலைகளை உதிர்க்கும் நாவல் மரம் பங்குனி-வைகாசி மாதம் பூப்பதும் அதன் பின் ஆவணி, புரட்டாதி மாதங்களில் பழங்களைத் தரும். மரம் உயரமாக மற்றும் அழகாக தோற்றமளிப்பதால் இம் மரத்தை வீதி ஓரங்களில் நிழலிற்காகவும், காற்றுத் தடுப்பானாகவும் வளர்க்கப்படுகிறது.

இது இந்தியா மற்றும் இந்தோனேசியாவிற்கு உரியது. இலங்கையில் உலர் வலயவனம் மற்றும் பற்றை காடுகளிலும் வளர்கின்ற நாவல் மரம் ஈர, இடை வலயங்களிலும் சிறப்பாக வளரக்கூடியது.

இது 5-30 மீற்றர் உயரமாக வளரக்கூடிய, தண்டின் சுற்றளவு 0.5-3 மீற்றர் வரை கொண்ட 100 ஆண்டுவரை வாழும் தாவரமாகும். இது வறட்சியையும் வெள்ளத்தையும் தாங்கி வளரக்கூடியது. பூக்கள் இளஞ்சிவப்பு, மஞ்சள் அல்லது வெள்ளை நிறமானவை, பூங்கொத்துக்களாக தாவரம் முழுவதும் உருவாகும். ஆனால் காய்கள் கொத்துகளினுள் ஐதாக அமைந்து காணப்படும்.

மண்

நாவல் மரம் அனைத்து மண்ணிலும் வளரும். எனினும் அதிக உற்பத்தி திறன் மற்றும் தரமான வளர்ச்சிக்கு களிமண் அல்லது நன்கு வடிகால்வசதியுள்ள மண் தேவை. இத்தகைய மண் போதுமான ஈரப்பதத்தை தக்கவைத்துக் கொள்கிறது. இதனால் வளர்ச்சி நன்றாக இருப்பதோடு அதிக பழங்களையும் அளிக்கிறது. நாவல் ஓரளவு உப்புத் தன்மை மற்றும் நீர் தேங்கிய நிலையிலும் நன்றாக வளரும்.

காலநிலை

நாவல் வெப்பமண்டல மற்றும்மிதவெப்பமண்டலகால நிலையில் நன்கு வளரும். பூ மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் வறண்ட வானிலை தேவைப்படுகிறது. மிதவெப்ப மண்டல பகுதிகளில், மழைப் பொழிவு பழம் பழுக்கும் தருணத்தில் இருப்பதால் பழங்களின் எடை, நிறம் மற்றும் சுவை அதிகரிக்கும்.

இனப்பெருக்கம்

விதைமற்றும்நாற்றுமுறையில் நாவல் இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. தாவரபதிய முறையும் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் இந்த முறை காய் பிடிக்க தாமதமாகும் என்பதால் அறிவுறுத்தப்படுவதில்லை. எனவே விதை இனப் பெருக்கமே பரிந்துரைக்கப்படுகிறது.

வித்துக்கள்முளைக்க சுமார் 10 முதல் 15 நாட்களாகும். நாற்றுகளை மாசி முதல் பங்குனி அல்லது மழைகாலத்தில் அதாவது ஆவணி முதல் புரட்டாதி வரை நடலாம்.

நாவல் இனப்பெருக்கம் செய்வது எளிதானது. 10 - 14 மி.மீ.தடிப்பாக இருக்கும் ஒரு வயதான நாற்றுகளில் ஒட்டுதல் செய்ய வேண்டும். குறைவான மழை உள்ள பகுதிகளில் ஒட்டுதல் செய்ய சிறந்த மாதம் ஆடி முதல் ஆவணி ஆகும். மழை அதிகமாக உள்ள பகுதிகளில் ஒட்டுதல் வைகாசி-ஆனி மாதங்களில் செய்யலாம்.

நடுகை செய்தல்

இவை மாசி, பங்குனி மற்றும் மழைக்காலம் ஆடி, ஆவணி ஆகிய இரண்டு பருவங்களிலும் நடுகை செய்யலாம். பிந்தைய பருவத்தில் நடுகை செய்வது சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஏனெனில், மாசி மற்றும் பங்குனி மாதங்களில் நடுகை செய்தால் வைகாசி மற்றும் ஆனிமாத வரட்சியை தாங்கி வளருவது கடினமாக இருக்கும்.

நடுவதற்கு முன் விளை நிலத்தை சுத்தப்படுத்தி உழ வேண்டும். 1x1x1மீ. குழிகளை 10 மீ இடைவெளியில் தோண்ட வேண்டும். பொதுவாக, பருவமழைக்கு முன்பே குழிகள் தோண்டுவதை நிறைவு செய்ய வேண்டும். குழியில் 75% மேல் மணல் மற்றும் 25 % மாட்டெரு அல்லது உக்கிய உரம் ஆகியவற்றை கலந்து நிரப்ப வேண்டும். பொதுவாக நாவல் மரம் நிழலுக்காக பண்ணை மற்றும் கிணற்றடிகளில் வளர்க்கப்படுகிறது. இங்கே இவை பழங்களைத் தவிர நிழலையும் வழங்குகின்றன.

உரமிடுதல்

நாவலுக்கு பொதுவாக உரமிடுவதில்லை. ஆண்டுக்கு 19 கிலோ மாட்டெரு இடவேண்டும். மரம் நன்கு வளரும் நிலையில் மரம் ஒன்றுக்கு 75 கிலோ அளிக்க வேண்டும்.

பொதுவாக, நாற்று மூலம் நட்ட செடி காய் பிடிக்க 8 முதல் 10 வருடமாகும். ஒட்டுதல் மூலம் நட்டசெடி காய் பிடிக்க 6 முதல் 7 வருடமாகும். மண்ணில் அதிக ஊட்டசத்து இருந்தால் இலைகள் அதிகமாக வரும். அதனால் காய் பிடிப்பதற்கு தாமதமாகும். இந்த மரங்களுக்கு உரம் மற்றும் பாசன அளவுமிகக் குறைவாக வழங்கப்பட வேண்டும். புரட்டாதி மற்றும் ஐப்பசி-பங்குனி மாதங்களில் நிறுத்திவிட வேண்டும். இந்த முறை நாவலில் மொட்டு அரும்புவதற்கும், காய் பிடிப்பதற்கும் உதவுகிறது.

பயன்பாடு

நாவல்விதை:- நாவல் பழத்தைச் சாப்பிட்ட பின்பு கிடைக்கும் விதையை நன்கு நிழலில் உலர்த்தி பொடி செய்து அதனை 2 - 4 கிராம் வீதம் மூன்று வேளை எனத் தண்ணீரில் கலந்து அருந்தி வர, நீரிழிவுநோய் (Diabetes) குறையும். விதையைப் பொடியாக்கி மாம்பருப்புத் தூளுடன் சேர்த்து உண்டால் சிறுநீரைப் பெருக்கும். இவ் விதையை மிகுந்த அளவில் உண்ண நஞ்சாக அமையும். இது பித்தத்தையும் போக்கும் மாவிதை. நாவல் விதை ஆகிய இரண்டையும் உலர்த்திப் பொடித்து சம அளவில் மோரில் கலந்தும் அருந்தலாம்.

நாவல் இலை:- நாவல் கொழுந்துச் சாறு, மாவிலைச் சாறு ஆகிய இரண்டையும் கலந்து கடுக்காய் பொடியுடன் சேர்த்து ஆட்டுப்பாலில் கலக்கி பருகினால், சீதக்கழிச்சல் போகும். நாவல் மரத்தின் இலைக்கொழுந்து, மாவிலைக் கொழுத்து ஆகிய இரண்டையும் சமஅளவில் எடுத்துமை போல் அரைத்து தயிரிலோ, மோரிலோ கலந்து சாப்பிட வயிற்றுப்போக்கு, குருதிச் சீதபேதி குணமாகும்.

நாவல்பட்டை:- நாவல்மரப் பட்டை குரல் இனிமையை அதிகரிக்கும். இது ஆஸ்துமா, தாகம், களைப்பு குருதி சீதபேதி, பெரும்பாடு, ஈளை இருமல் ஆகிய நோய்களுக்கும் நல்லது.

குழந்தையின் பல்ஈறு நோய் க்கும், நாக்கு, வாய், தொண் டைப் புண்களுக்கும் இதன் சாற்றைப் பயன்படுத்தி வாய் கொப்பளிக்கலாம். மரப்பட் டையை இடித்து எருமைத் தயிரில் சாப்பிட பெண்களின் உதிரப்போக்கு குணமாகும்.


குழந்தைகளுக்கு உண்டாகும், கணமாந்தம், வயிற்றுப் போக்கு, குருதி சீதபேதி ஆகியவற்றுக்கு நாவல் மரப்பட்டையை வெள்ளாட்டுப் பாலுடன் சேர்த்து நன்கு காய்ச்சி வடிகட்டி வேளைக்கு சங்களவு என மூன்றுமுறை தரலாம். மரப் பட்டைத்தூளை இரத்தம்வழிகின்ற புண்ணில் தூவ குணமாகும். பட்டைக் கசாயத்தைக் கொண்டு புண்களையும் கழுவலாம்.

நாவல் வேர்:- மரவேர், வாதம், தெண்டைகரப்பான், நீரிழிவு, குருதி, சீதபேதி, வாதம், செமியாமை ஆகியவற்றைப் போக்கும் பட்டையை அரைத்து அடிபட்டவீக்கம், கட்டி முதலியவற்றின் மீதுபோட அவை அமுங்கும். நாவல் வேர் ஊறியநீர் காய்ச்சல், நீரிழிவுக்கு நல்லது. உடலுக்குக் குளிர்ச்சியையும் ஆண்மையையும் தரும்.

**பிரியதரிசினி பன்னீர்ச்செல்வம்**
விவசாயப் போதனாசிரியர், தெல்லிப்பளை

# ஒன்றிணைந்த எதிரணி பழிவாங்கப்படுகிறதா?

## சபாநாயகரிடம் வினவ ipu தீர்மானம்



(கொழும்பு)

இலங்கையில் ஒன்றிணைந்த எதிரணியினர் திட்டமிட்டு பழிவாங்கப்படுவதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில், சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கேட்டு அறிந்து கொள்ளவுள்ளதாக அனைத்து நாடாளுமன்ற ஒன்றியம் உறுதியளித்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் அமைந்துள்ள அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தில் முறையிடுவதற்காக, டளஸ் அழகப்பெரும தலைமையிலான மூவரடங்கிய குழுவொன்று அங்கு சென்றுள்ளது.

கடந்த வியாழனன்று அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் Martin Chungong மற்றும் ஒன்றியத்தின் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களின் தலைவரான Rogier Huizenga ஆகியோரை சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து ஒன்றிணைந்த எதிரணியினர் தெரிவித்தபோது, இவ் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த எதிரணியினர் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டு வருவதாகவும், அவர்களது கடவுச்சீட்டு முடக்கப்படுவதாகவும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதாகவும், நாடாளுமன்ற விவாதங்களில் ஒன்றிணைந்த எதிரணியினருக்கு போதிய நேரம் ஒதுக்கப்படுவதில்லை என்றும் இவர்கள் முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில், ஒன்றிணைந்த எதிரணியினரின் கைது தொடர்பான விபரங்களை பெறுமாறு அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் மனித உரிமைகள் தொடர்பான தலைவருக்கு அறிவுறுத்திய ஒன்றியத்தின் செயலாளர் நாயகம், தாம் இவ்விடயம் தொடர்பாக சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கலந்துரையாடுவதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகளையும் இக்குழுவினர் சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து முறையிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# எரிபொருளுக்காக நீண்டவரிசையில் காத்திருப்பு




(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்புநிலையத்தில் மழையையும் பொருட்படுத்தாது பெருமளவான நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருள் நிரப்பிச் சென்றனர். (இ-60)

# பிள்ளைகள் விழா



(பரந்தன்)

தென்னிந்திய திருச்சபையின் வருடாந்த பிள்ளைகள் விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் வடக்கு- கிழக்கு, மலையகம் மற்றும் தென்னிலங்கையை சேர்ந்த தென்னிந்திய திருச்சபையின் சிறார்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவிற்காக நடத்தப்பட்ட பாடல், சித்திரம் உள்ளிட்ட போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களிற்கு சான்றிதழ்கள், கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வருடத்திற்கான பேராயர் கிண்ண வேதாகம புதிர் போட்டியில் கிளிநொச்சி முறிப்பு திருச்சபையை சேர்ந்த சிறுமி பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து சிறார்களின் கலை நிகழ்வுகள் மற்றும் வேதாகம புதிர் போட்டிகளும் இடம்பெற்றன. (இ-312)



# சிறுவர் அரங்கம்

# கிட்டாதாயின் வெட்டென மற!

04.11.2017 தொடர்ச்சி...

"சரிகோபு, நீ என்கூட வயலுக்கு வா" என்றவுடன் மகிழ்ச்சியுடன் ஓடினான் கோபு.


வருடங்கள் ஓடின. இன்று பாலன் கல்லூரியில் படிக்கும் மாணவன். ஆனால் கோபுவோ வயலில் பாடுபட்டு விளைச்சலைப் பெருக்கி வீட்டின் செல்வ நிலையையும் உயர்த்தியிருந்தான். முதுமையின் விளிம்பில் நிற்கும் வீரையன் தனக்கு பெரும் உதவியாக இருக்கும் கோபுவைப் பற்றிப் பெருமை கொண்டிருந்தான்.

பலவிடயங்களைத் தெரிந்து கொண்டு இன்னும் சிறப்பான முறையில் தன் நிலத்தைப் பாதுகாக்கவும் விளைச்சலைப் பெருக்கவும் முயன்றான். தினமும் நூல்நிலையம் சென்று விவசாயம் சம்பந்தமான நூல்களைப் படித்தான். பொது அறிவையும் வளர்த்துக் கொண்டான்.

அடிக்கடி தந்தையின் சந்தேகங்களைப் போக்கவும் அவன் அறிவை எண்ணி வீரையன் ஆச்சரியப்பட்டான்.

பாலன் கஷ்டப்பட்டு கல்லூரிப் படிப்பை முடித்தான். ஆனால் வேலைக்காக அலைவதே அவன் வேலையாக இருந்தது.

ஆனால் கோபுவோ நிற்க நேரமின்றி வயல் வேலை என்று ஓடிக்கொண்டிருந்தான். ஒருநாள் அந்த ஊருக்கு மாவட்டக் கலெக்டர் வருகை புரிந்தார். அவ்வூர் அதிகாரிகள் கூடியிருக்கும் கூட்டத்தில் வீரையன் பெருமைப்படும் ஒரு காரியத்தைச் செய்தார். ஊரே கூடியிருக்கும் அந்த இடத்தில் சிறந்த விளைச்சலைக் காட்டிய கோபுவுக்கு நமது குடியரசுத் தலைவர் பாராட்டும் பரிசும் அளிக்க இருக்கிறார் என்ற செய்திதான் அது. ஊர் பெரியவர் முதல் அனைத்து மக்களும் சிறந்த மகனைப் பெற்ற தந்தை என்று பாராட்டிப் புகழ்ந்தனர்.



அன்று இரவு வீரையன் தன் பிள்ளைகள் இருவருடனும் அமர்ந்து கொண்டான்.

"கோபு, உன் அண்ணன் படிக்கப் போனபோது நீயும் போகலையேன்னு கோபப்பட்டேன். ஆனால் நீயோ வாத்தியாரு ஏதோ சொன்னாருன்னுட்டு படிப்பை நிறுத்திட்டே, நீ உருப்படுவியான்னு கவலைப் பட்டேன். ஆனா, அந்தக் கவலை இப்போ இல்லை."

"அப்பா, வாத்தியாரு ஏதோ சொல்லலைப்பா, வாழ்க்கைக்குத் தேவையான பழமொழியைத் தான் சொல்லியிருக்காரு.

கிட்டாதாயின் வெட்டென மற அப்படின்னு" அவரு சொன்னபடி எனக்கு வராத படிப்பை நினைச்சு நான் வருந்தாம அதை மறந்துட்டு நமக்கும் நாட்டுக்கும் எது தேவையோ அதைக் கத்துக் கிட்டேன். அந்த விவசாயம் நம்மையும் உசத்தி நாட்டையும் உசத்திடுச்சில்லெப்பா?"

முகத்தில் புன்னகை மாறாமல் நின்ற பாலனும் "என்னோட கல்வி அறிவையும் பயன்படுத்தி தம்பிக்கு உதவியா நான் இருப்பேன் அப்பா." என்றவுடன் அவனையும் சேர்த்து அணைத்துக் கொண்டு மகிழ்ந்தான் வீரையன்.

அதனால் நம்மால் முடிந்ததை முயன்று கற்கவேண்டும் இயலவில்லையேல் அதைமறந்துவிட்டு இயன்றதைத் தெரிந்து கொண்டு அதிலும் வெற்றி அடைவதே நம் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

(முற்றும்).

## 11.2017 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1632- முப்பதாண்டுப் போரில் சுவீடனின் பேரரசன் குஸ்டாவஸ் அடொல்பஸ் கொல்லப்பட்டான்.
- 1844- டொமினிக்கன் குடியரசின் முதலாவது அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது.
- 1860- ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் 16வது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே குடியரசுக் கட்சியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஜனாதிபதியாவார்.
- 1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்குத் தலைவரானார்.
- 1891- இலங்கை ஸ்டீம்ஷிப் கம்பனிக்குச் சொந்தமான நீராவிக் கப்பல் "லேடி ஹவ்லொக்" முதன் முறையாக கொழும்பு வந்தடைந்தது.
- 1935- எட்வின் ஆம்ஸ்ட்ரோங் பண்பலை ஒலிபரப்பு பற்றிய ஆய்வை வெளியிட்டார்.
- 1941- இரண்டாம் உலகப் போர்: சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தனது முப்பதாண்டு கால பதவியில் இரண்டாவது தடவையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். ஜெர்மனியின் தாக்குதலில் 350,000 சோவியத் வீரர்கள் கொல்லப்பட்டிருந்தாலும், ஜெர்மனியர்கள் தமது 4.5 மில்லியன் பேரை இழந்திருப்பதாகவும் சோவியத் வெற்றி கண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.
- 1943- இந்தியாவின் வங்காளத்தில் "நவகாளி"யில் இடம்பெற்ற இந்து-முஸ்லிம் கலவரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக மகாத்மா காந்தி கொல்கத்தாவில் இருந்து நவகாளி வந்து சேர்ந்தார்.
- 1944- புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது. பின்னர் ஜப்பானில் கொழுத்த மனிதன் அணுகுண்டு போடுவதற்கு இது பயன்பட்டது.
- 1962- ஐநா பொதுச்சபை தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.
- 1963- வியட்நாம் போர்: நவம்பர் 1 இல் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து, இராணுவத் தலைவர் டோங் வான் மின் தெற்கு வியட்நாமின் ஜனாதிபதியானார்.
- 1965- ஐக்கிய அமெரிக்காவுக்கு குடியேற விரும்பிய கியூபா நாட்டினரை விமானம் மூலம் அங்கு கொண்டு செல்ல கியூபாவும் ஐக்கிய அமெரிக்காவும் உடன்பட்டன. இதன்படி 1971 இற்குள் 250,000 கியூபர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.
- 1977- ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியாவில் அணைக்கட்டு ஒன்று இடிந்ததில் 39 பேர் கொல்லப்பட்டனர்.
- 1999- அவுஸ்திரேலியர்கள் அனைத்து மக்கள் வாக்கெடுப்பு மூலம் பிரித்தானிய முடியாட்சியின் கீழ் தொடர்ந்திருக்க சம்மதம் தெரிவித்தனர்.

### பிறப்புகள்

- 1861- ஜேம்ஸ் நெய்ஸ்மித், கூடைப்பந்தாட்டத்தைக் கண்டுபிடித்த கனேடிய-அமெரிக்கர் (இ. 1939)
- 1932- பிரான்சுவா எங்கிலேர், நோபல் பரிசு பெற்ற பெல்ஜிய இயற்பியலாளர்
- 1937- யஷ்வந்த் சின்கா, இந்திய அரசியல்வாதி
- 1950- நிமலன் சௌந்தரநாயகம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 2000)
- 1987- ஆனா இவனோவிச், செர்பிய ரென்னிஸ் வீராங்கனை
- 1988- எம்மா ஸ்டோன், அமெரிக்க நடிகை

### இறப்புகள்

- 1406- ஏழாம் இன்னசெண்ட் (திருத்தந்தை) (பி. 1339)
- 1632- சுவீடனின் கஸ்டாவஸ் அடால்பஸ் (பி. 1594)
- 1872- ஜார்ஜ் கார்டன் மீடு, அமெரிக்கப் பொறியியலாளர், அமெரிக்கத் தரைப்படை அதிகாரி (பி. 1815)
- 1893- பியோத்தர் இலீச் சாய்க்கோவ்சுக்கி, ரஷ்ய இசையமைப்பாளர் (பி. 1840)

### சிறப்பு நாள்

- மர நாள் (கொங்கோ குடியரசு)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 160 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 90 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 450 |
| தக்காளி | 200 | 200 | 100 | 140 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 60 | 60 | 60 |
| கோவா | 140 | 150 | 90 | 140 | 160 | 100 |
| கரட் | 140 | 150 | 70 | 100 | 240 | 80 |
| பூசணி | 80 | 100 | 70 | 60 | 80 | 50 |
| புடோல் | 120 | 100 | 60 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 320 | 450 | 250 | 300 | 500 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 140 | 200 | 240 | 130 |
| பாகற்காய் | 300 | 400 | 180 | 240 | 400 | 250 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 100 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 250 | 160 | 150 | 140 | 200 | 250 |
| லீக்ஸ் | 160 | 250 | 200 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 100 | 150 | 70 | 120 | 120 | 80 |
| கறிமிளகாய் | 300 | 200 | 250 | 240 | 320 | 250 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 150 | – | 120 | 400 |
| போஞ்சி | 200 | 250 | 120 | 130 | 200 | 180 |
| கத்தரிப்புள்ளை | 150 | 100 | 100 | – | 160 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 150 | 150 | 160 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 75 | 60-80 | 90 |
| இராசவள்ளி | - | 400 | 300 | – | - | - |
| வெங்காயப்பூ | 250 | 200 | 230 | – | 240 | - |
| முள்ளங்கி | 100 | 100 | 30 | 80 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 25 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | - | 100 | 30 | – | 80 | 80 |

நாடகத்தில் உன் அடியார் போல் நடித்து...
~ மாணிக்கவாசகர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களை இனி ஒருபோதும் ஏமாற்ற முடியாது

உள்ளூராட்சித் சபைத் தேர்தலுக்காக வட மாகாணம் நோக்கி தமிழ் அரசியல் பறவைகள் வரவுள்ளன.

மக்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெறுவதே அந்தப் பறவைகளின் இலக்கு. வந்த பறவைகள் கூடு கட்டி இங்கேயே இருக்கப்போவது போலக் காட்டிக் கொள்ளும்.

மாவீரர்களை நினைவேந்துவதில்கூட இம்முறை கடும் போட்டி நிலவும். புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயர் சொல்லுவதிலும் போட்டியிருக்கும்.

சிலவேளைகளில் தமிழ் அரசியல் கைதிகளுக்காகத் தாங்கள் குரல் கொடுத்ததாகவும் அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவர் என்ற உறுதிமொழிகளும் தரப்படலாம்.

ஏன்? நல்லாட்சியினரும் அவர்களின் வெற்றிக்காக தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கை வவுனியா நீதிமன்றுக்கு மாற்றியும் ஒரு சிலரை விடுதலை செய்தும் உதவி செய்யலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக வழமையை விட தேர்தல் நாடகத்தில் நடிப்பு உச்சக்கட்டமாக இருக்கும்.

உள்ளூராட்சித் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றால்தான் மேற்கொண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றி கதைக்கலாம். அதனை அமுல்படுத்தலாம். தீர்வு வருகின்ற நேரம் எங்களைப் பலப்படுத்துங்கள். தவறினால் கைக்குக் கிட்டியது வாய்க்குக் கிட்டாமல் போய்விடும்.

ஆகையால் உள்ளூராட்சித் சபைத் தேர்தலில் உங்கள் வாக்கு எங்களுக்கே.

உள்ளூராட்சி சபைகள் அனைத்தையும் நாங்கள் கைப்பற்றினால் வடக்கு கிழக்கை இணைக்க முடியும். நாங்கள் சொல்வதைத் தான் ஐ.நா சபை கேட்கும் அரிய சந்தர்ப்பம்; இறுதிச்சந்தர்ப்பம்.

அறிவில் உச்சமான எங்கள் தமிழ் மக்கள் தங்கள் கடமையை மறக்காமல் எங்களுக்கே வாக்களிக்க வேண்டும்.

சுயேட்சைக் குழுக்கள் பேரினவாதிகளிடம் பணம் பெற்று போட்டியிடுகின்றன. ஏனையவர்கள் ஆயுதக் குழுக்கள். அவர்கள் எங்களோடு இருந்தால் நாங்கள்பாவமன்னிப்புவழங்குவோம்.

ஆனால் அவர்கள் பிரிந்து நிற்கின்றனர். ஆகையால் அவர்கள் ஆயுதக் குழுக்கள். அதோ பொது அணி என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர் ஒரு பகுதியினர்.

மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட இவர்கள் சிறிய வீதிகளில் நின்றால் பெரும் எண்ணிக்கைபோல் தெரியும். அமைப்பின் ஆதரவாளர்கள். நாங்கள்தான் தமிழ் மக்களின் தலைவர்கள். எங்களை வெல்வதற்கு எவராலும் முடியாது வெற்றியின் நாளை சரித்திரம் சொல்லும். இப்படை தோற்கின் எப்படை வெல்லும்... இப்படி ஒரு பெரும் பிரசாரம் நடக்கும்.

ஆனால் இனியேல் தமிழ் மக்களை எவரும் ஏமாற்ற முடியாது. அவர்கள் ஏமாறவும் மாட்டார்கள். பாடம் புகட்டுவார்கள். உள்ளூராட்சி சபையின் கடந்த கால நிர்வாகம் செய்த ஊழல்கள் கண்டு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்பார்கள்.

அதுமட்டுமல்ல. நீங்கள் தமிழ் மக்களுக்குச் செய்தது சரியா என்று கேள்விக்குமேல் கேள்வி கேட்பர்.

தங்களின் தீர்ப்பை தமிழ் மக்கள் இம்முறை வழங்குவர். இது சத்தியம்.

# 4 லட்சம் தொழில் வாய்ப்புக்கள் பற்றிய முழு விபரத்தை வெளியிட முடியுமா?

## அரசிடம் கேட்கிறார் நாமல் எம்.பி.

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியதாக கூறும் 4 லட்சம் தொழில் வாய்ப்புகள் பற்றிய முழு விபரம் வெளியிட முடியுமா? என அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற அரசியல் விவாத நிகழ்ச்சியில்கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஆனால் 4 லட்சம் பேருக்கு தொழில் வழங்கியுள்ளதாக பிரதமர் கூறியுள்ளார். இந்த தொழில் வாய்ப்புகள் நாம் அறிந்தவரை இலங்கையர்களுக்கு வழங்கப்படவில்லை. பிரதமர தொடர்ந்து இதனை கூறுவதாக இருந்தால்அதனை அவர் நிரூபிக்க வேண்டும் என நாமல் தெரிவித்துள்ளார்.

தற்போதய மத்திய வங்கி ஆளுநரின அறிக்கையின்படி இலங்கையில் கடந்த வருடம் சுமார் 4 லட்சத்து 70 ஆயிரம் தொழில் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பத்திரிகைகளில் தற்போது விளம்பரம் செய்யப்படுவதை காண முடிகிறது. குறித்த விளம்பரங்களில் இந்த நாட்டை கட்டியெழுப்ப, தொழில் நிர்மாணம் செய்ய ஐக்கிய தேசிய கட்சியால் மட்டுமே முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது சுதந்திரக் கட்சி கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகித்த போதும் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளே முன்னெடுக்கப்படுகிறது.

நாட்டின் தேசிய சொத்துக்கள் வெளிநாடுகளுக்கு தாரைவார்க்கப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாகூட அரச நிறுவனங்களை தனியார் நிறுவனங்களுக்கு விற்றார். ஆனால் அவை 10 வருடங்களுக்கு விற்பனை செய்யப்பட்டது.

அதனால்தான் மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கன், ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் ஆகிய நிறுவனங்களை அரசமயமாக்க முடிந்தது.

ஆனால தற்போது நாட்டின் சொத்துக்கள் 99 அல்லது 40 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்படுகிறது என தெரிவித்தார். (இ-7)

## திருடர்களின் அட்டகாசம் கட்டுடையில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டுடையில் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் நுழையும் திருடர்களின் அட்டகாசத்தால் அச்ச நிலை தோன்றியுள்ளதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கட்டுடை பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் கடந்த வாரம் ஆயுதங்களுடன் வீடொன்றிற்குள் புகுந்த திருடர்கள் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகை, பணம் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை திருடிச் சென்றதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போதிலும இதுவரை திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட யாரும் கைதுசெய்யப்படவில்லையென பிரதேச மக்கள் கவலையடைந்துள்ளனர். (இ-10,102)

## உரமானியம் வழங்க ஏற்பாடு

சண்டிலிப்பாய் மற்றும் காரைநகர் கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரமானியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரமானியம் பெற்றுக் கொள்ள விரும்பும் விவசாயிகள் தமது பிரதேச பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் மேட்டுநில உரமானிய விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி விண்ணப்பதாரியின் புகைப்படம், தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதி 2, இலங்கை வங்கிக் கணக்கு புத்தகத்தின் நிழற் பிரதி மற்றும் கமக்கார அமைப்பின் அங்கத்துவத்தை புதுப்பித்த பற்றுச்சீட்டு என்பவற்றுடன் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை சண்டிலிப்பாய் மற்றும் காரை கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மற்றும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளில் இதுவரை நெல் உரமானியப் பதிவுகளை மேற்கொள்ளாதவர்களும் மேற்குறிப்பிட்ட திகதிகளில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் சண்டிலிப்பாய் காரைநகர் கமநல சேவை நிலையத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-10-82)

## உத்தேச அரசியல் அமைப்பு ஒத்திவைக்கப்படும் அறிகுறி

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகளை எதிர்வரும் சில மாதங்களுக்கு ஒத்திவைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்பொழுது உத்தேச அரசியலமைப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கைக்கு எதிராக எழுந்துள்ள மகாசங்கத்தினரின் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் முன்வைக்கும் கருத்துக்கள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்க இந்த கால அவகாசத்தை எடுத்துக் கொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலும், அதனைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலும் நடைபெறவுள்ளதால் புதிய அரசியலமைப்பு நடவடிக்கைகளை தேர்தல்களின் பின்னர் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள்மேலும சுட்டிக்காட்டியுள்ளன.

எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள புதிய அரசியலமைப்பு தொடர்பான விவாதத்தை தொடர்ந்து இந்த ஒத்திவைப்பு அறிவிப்பை அரசாங்கம் அறிவிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

## 14 வயதுச் சிறுமியை காணவில்லை

(கரணவாய்)

வடமராட்சி தும்பளைப் பகுதியில் சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

தும்பளை கிழக்கைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுமி நேற்று முன்தினம் பிரத்தியேக வகுப்பு ஒன்றிற்கு செல்வதாக கூறிவிட்டு சென்றதாகவும் மாலையாகியும் சிறுமி வீடு திரும்பாததையடுத்து அவரின் பெற்றோர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினைப் பதிவு செய்துள்ளனர். (இ-60)

## திக்கத்தில் 3 கடைகள் உடைப்பு ஒரு கடையில் மட்டுமே திருட்டு!

(கரணவாய்)

வடமராட்சி திக்கம் பகுதியில் மூன்று கடைகள் உடைக்கப்பட்டுள்ள போதிலும் ஒரு கடையில் மட்டும் திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடும் மழை பெய்து கொண்டிருந்தமையினால் அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

திக்கம் சந்தையில் உள்ள இரண்டு பல சரக்கு விற்பனை நிலையங்களின் பின்பக்க கதவு வழியாக உள்நுழைந்த திருடர்கள் மேலும் ஒரு கதவு அங்கு காணப்பட்டமையால் அதனை உடைக்காது அத்திருட்டை கைவிட்டு அதற்கு அருகில் இருந்த சிகை அலங்கரிப்பு நிலையத்தின் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் சிகை அலங்கரிப்புக்கு பயன்படுத்தும் உபகரணங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவங்கள் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

## 7 சடலங்கள் ஆற்றில் மீட்பு

(கொழும்பு)

மாத்தளை, லக்கலை, தெல்கமு ஓயாவில் குளிக்கச் சென்ற நிலையில் காணாமல்போன மற்றொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில் ஆற்றில் காணாமல் போன 8 பேரில் இதுவரை 7 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று பிற்பகல் தெல்கமு ஓயவில் குளிக்கச்சென்ற எட்டுப் பேர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், பிரதேச மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று முன்தினம் ஐவரின் சடலங்களை மீட்டனர்.

இந்நிலையில், ஏனைய மூவரை தேடும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வந்த நிலையில் நேற்று நான்கு வயதுச் சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், 12 மற்றும் 7 வயதான இரு சிறுமிகளைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில கௌதாரி முனைப் பிரதேசத்திலும் வவுனியா பிரதேசத்தில் குருக்கள் புதுக்குளம், குருக்கலூர், பறயனாலங்குளம், நீலியாமோட்டை. ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் தாராபுரம் பிரதேசம், தாராபுரம் வீட்டுத் திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# இன்று மோசமான நாள் பட்மின்டன் சிந்து டுவிட்



இந்திய பாட்மின்டன் வீராங்கனை பி.வி. சிந்து ஹைதராபாத்திலிருந்து மும்பைக்கு தனியார் விமான சேவையான இண்டிகோ நிறுவனத்தின் விமானத்தில் சென்றது மோசமான நாளாக அமைந்தது என்று அவருடைய டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து பி.வி.சிந்து தனது டுவிட்டர் பக்கத்தில், "இண்டிகோ விமான ஊழியர் அஜிடேஷ் என்பவர் என்னிடம் மிக மோசமாகவும், கடுமையாகவும் நடந்து கொண்டார்.

அந்த விமானத்திலிருந்த பணிப்பெண் அஷிமா அவருக்கு பயணிகளிடம் முறையாக நடந்து கொள்ளுங்கள் என்று அறிவுரை வழங்கியும் அவர் என்னிடம் மோசமாக நடந்து கொண்டது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது.

இது போன்ற பணியாளர்கள் இண்டிகோ போன்ற விமான சேவை நிறுவனத்தில் பணிபுரிவது பயணிகளிடம் இண்டிகோ நிறுவனத்திற்கான புகழ் கெட்டுப் போக நேரிடும்" என்று பதிவிட்டுள்ளார். பி.வி. சிந்துவின் இந்தச் குற்றச்சாட்டு குறித்து இண்டிகோ நிறுவனம் இதுவரை எந்த விளக்கமும் அளிக்கவில்லை. (க)

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு இன்னொரு சிக்ஸர் மன்னன்

## பயிற்சியாளர் புகழாரம்




இலங்கை கிரிக்கெட் அணியின் இளம் வீரர் தஷுன் சானக்கவை அந்த அணியின் பயிற்சியாளர் புகழ்ந்துள்ளார்.

லாகூரில், பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டி20 போட்டியில் 181 ஓட்டங்களை இலக்காக கொண்டு களமிறங்கிய இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது.

இலங்கை 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்திருந்த போது ஐந்தாவது வீரராக களமிறங்கிய சானக்க நிதான ஆட்டத்தினை வெளிப்படுத்தினார்.

பின்னர் தனது அதிரடியைக் காட்டிய அவர் 36 பந்துகளில் 54 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். இதன் மூலம் மீண்டும் ஒருமுறை தான் ஒரு சிறந்த அதிரடி துடுப்பாட்ட வீரர் என்று கிரிக்கெட் உலகிற்கு நிரூபித்தார்.

இலங்கை அணியின் பயிற்சியாளர் விஜிகூன் கூறுகையில், தஷுனுக்கு முதலில் சிறிது நேரம் தேவைப்படும். ஆனால் அவர் 10 அல்லது 15 பந்துகளை எதிர் கொண்டுவிட்டால் தனது ஆட்டத்தினை அவ்ரே கட்டமைத்துக் கொண்டு மிகப்பெரிய அளவிலான ஓட்டங்களை குவிப்பார்.

அவர் சிக்ஸர்கள் அடிப்பதில் கைதேர்ந்தவர். தற்போதைய இலங்கை அணியில் அவர் இடம் பிடித்திருப்பது அணிக்கு மேலும் பலம் சேர்க்கும் என தெரிவித்துள்ளார்.

சிக்ஸர்கள் அடிப்பதில் வல்லவரான சானக்க 44 முதல் தர போட்டிகளில் 82 சிக்ஸர்களை அடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் இடம்பிடித்துள்ளார். (க)

# இம்முறை சொந்த மண்ணில் வைத்து இந்தியாவை துவம்சம் செய்வோம்




ரங்கன ஹேரத் நம்பிக்கை

இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட்தொடரை வெல்வதுதான்என்னுடைய கனவு என்று இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் கூறியுள்ளார்.

இந்த வருடம் இறுதியில் இலங்கை அணி, இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

சொந்தமண்ணில் தொடரை இழந்த இலங்கை அணி, இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் பழி வாங்க காத்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான ஹேரத், நாங்கள் கடந்த ஆறு வருடங்களுக்கு முன் தென்னாபிரிக்கா அணியை அதன் சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரில் வீழ்த்தி அசத்தினோம்.

ஆனால் நாங்கள் இன்னும் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா மண்ணில் தான் தொடரை கைப்பற்றவில்லை. அதனால் அது தான் என்னுடைய கனவு. இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை நாங்கள் கைப்பற்ற வேண்டும்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றுள்ளதால், எங்களின் தன்னம்பிக்கை அதிகரித்துள்ளதாகவும், நிச்சயம் வெல்லுவோம் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் கூறியுள்ளார். (க)

# அதிரடியை காட்டாதது ஏன்? வீரர்களை குறை கூறிய கோலி




இந்திய அணியுடனான இரண்டாவது இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தோல்வி குறித்து கூறிய இந்திய அணித்தலைவர் விராட் கோலி, எங்களின் பட்டிங் மோசமாக அமைந்துவிட்டது, 200 ஓட்டங்களை நெருங்க வேண்டும் என நினைக்கும்போது, அனைத்து வீரர்களும் தங்களது பங்களிப்பை காட்ட வேண்டும் என்பது மிக முக்கியம்.

அல்லது, யாரேனும் ஒரு வீரர் அதிரடியாக விளையாட வேண்டும், இது நடப்பதுதான். நாங்கள் சிறப்பாக விளையாடவில்லை என்பதே உண்மை என கூறியுள்ளார். (க)

# ஒரே ஆண்டில் 2 சதம் முன்ரோ புதிய சாதனை




ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் நடந்த இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து தொடக்க வீரர் கோலின் முன்ரோ 58 பந்தில் 109 ஓட்டம் எடுத்தார். இந்த ஆண்டில் அவர் 20 ஓவர் போட்டியில் அடித்த 2 ஆவது சதமாகும். இதற்கு முன்பு கடந்த ஜனவரி 7 ஆம் திகதி வங்காளதேசத்துக்கு எதிராக 101 ரன் எடுத்து இருந்தார்.

ஒரே ஆண்டில் 20 ஓவர் போட்டியில் இரண்டு சதம் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை முன்ரோ படைத்தார். மேலும் 20 ஓவர் சர்வதேச போட்டியில் இரண்டு சதம் எடுத்த வீரர்கள் வரிசையில் இணைந்தார். கிறிஸ்கெய்ல் (வெஸ்ட் இண்டீஸ்), இவின் லீவிஸ் (வெஸ்ட் இண்டீஸ்), மெக்குல்லம் (நியூசிலாந்து) ஆகியோர் இரண்டு செஞ்சூரி அடித்து இருந்தனர். (க)

# கோலி பிறந்த நாளில் எங்கள் பழிவாங்கல் பாண்டியா போட்ட டுவிட்



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவன் விராட் கோலி நேற்று முன்தினம் தன்னுடைய 29 ஆவது பிறந்த நாளை கொண்டாடுகிறார். நியூசிலாந்துக்கு எதிரான போட்டி முடிந்த பிறகு ஓய்வு அறையில் இந்திய அணியினருடன் கேக் வெட்டி விராட் கோலி பிறந்தநாளை கொண்டாடினார். கேக் வெட்டிய படங்கள் மற்றும் வீடியோக்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

நியூசிலாந்துடனான போட்டியில் இந்தியா தோல்வியடைந்தாலும், விராட் கோலியின் பிறந்த நாளை இந்திய அணியினர் மகிழ்ச்சியுடன் கொண்டாடியுள்ளனர்.

அந்த வீடியோவில் கேக்கை வெட்டிய விராட் கோலி முதலில் ஷிகர் தவானுக்கு ஒரு வாய் கேக் ஊட்டுகிறார். அதன் பின் தவான் முதலில் கோலியின் முகத்தில் கேக்கை பூசினார்.

அதன்பிறகு அணியினர் அனைவரும் சேர்ந்து விராட் கோலியின் முகத்தில் கேக் பூசி கொண்டாடினர்.

ஹர்திக் பாண்டியா வெளியிட்டுள்ள டுவிட்டில், "நம்பர் 1 பழிவாங்குதல். பிறந்தநாள் வாழ்த்துக்கள் கேப்டன்" என்று குறிப்பிட்டு முகம் முழுவதும் கேக் பூசப்பட்ட விராட் கோலியின் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார். (க)

## தமிழர் விடுதலைக்...

என கட்சி அறிவித்துள்ளது.

எந்த கட்சியுடனேயோ இணைந்து போட்டியிடுவது என்ற முடிவை கட்சி உடனடியாக எடுக்க முடியவில்லை. ஏனெனில் ஒரு கட்சி இணைவதை இன்னொரு கட்சி விரும்புவதாகத் தெரியவில்லை. ஆகவே தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் நடைபெற இருக்கின்ற சகல மன்றங்களின் வட்டாரங்களில் போட்டியிட தீர்மானித்துள்ளது. ஆனால் எம்முடன் இணைந்து தேர்தலில் போட்டியிட விரும்பும் கட்சிகளை இணைப்பது பற்றி நாம பரிசீலிப்போம் என்றும் எங்கெங்கு தமிழ் மக்கள் வாழ்கின்றார்களோ அவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் ஒவ்வொருவரையும், தனிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி அமைப்புக்களாக இருந்தாலும் சரி இணைந்து உருவாக்கவிருக்கும் பொது கொள்கையின் கீழ் இணைந்து செயற்பட முன்வருமாறும் வேண்டிக்கொள்வது எம்முடன் இணைந்து தேர்தலில் போட்டியிட விரும்பும் ஒவ்வொருவரும் தன்னுடன் தொடர்பு கொண்டு ஒரு பொதுத் திட்டத்தை உருவாக்க ஒன்றிணையும்படி தமிழர் விடுதலைக் கூட்டணியன் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி கேட்டுக்கொண்டுள்ளார். (மு)

## பதில் சட்டமா அதிபராக...

சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வெளி நாடு சென்றுள்ளதால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தப்புல டி லிவேரா எதிர்வரும் 16ஆம் திகதி வரை பதில் சட்டமா அதிபராக செயற்படவுள்ளார்.

முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு உதவி புரியும் சட்டத்தரணிகள் குழுவின் தலைவராகவும் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தப்புல டி லிவேரா செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (மு)

## தமிழரசு கட்சி...

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை பொது மண்டபத்தில் நடைபெற்றது

இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன். மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று உறுப்பினர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது

விசேட அதிரடிப்படை பாதுகாப்புடன் நடைபெற்ற இந்த கூட்டத்தில் ஊடகவியலாளர்களுக்கு ஆரம்பத்தில் புகைப்படம் மற்றும் ஒளிப்பதிவு செய்ய அனுமதித்ததோடு தொடர்ந்து கூட்டத்தில் இருப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. கூட்டத்தின் ஆரம்பம் முதலே புதிய உறுப்பினர் தெரிவில் இழுபறி நிலைகள் காணப்பட்டதோடு குழப்பமும் நிலவியதை அவதானிக்கமுடிந்தது. இந்த குழப்ப நிலை காரணமாக இடையில் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் விலகி சென்றதை அவதானிக்கமுடிந்தது.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் சமாதான படுத்தலின் பின்னர் குழப்பம் தணிவடைந்ததோடு தற்காலிகமாக புதிய உறுப்பினர்கள் கரைதுறைப்பற்று கிளைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டதோடு கூட்டம் நிறைவடைந்தது

இருந்தபோதிலும் கூட்டத்தின் உள்ளே குழப்பத்தில் ஈடுபட்ட கட்சியின் ஆதரவாளர்கள் கூட்டம் நிறைவடைந்தபின்னர் வெளியே வந்து குழப்பத்தில் ஈடுபட்டதுடன் கைகலப்பில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை இது தொடர்பில் கட்சி உறுப்பினர் சிலரிடம் வினவியபோது,

நடைபெற்று முடிந்த கூட்டத்தில் கட்சி உறுப்பினர்களின் சில மோசடி தொடர்பில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட நபர்களே தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், இந்த கட்சியின் ஏனைய உறுப்பினர்களின் தலையீட்டின் மூலம் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை இலங்கை தமிழரசு கட்சியில் இணைவதற்கு தமிழ் மக்கள் போட்டி போட்டு சண்டை போட்டுகொள்ளும் நிலைமை தற்போது காணப்படுவதாக இலங்கை தமிழரசு கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (மு-281)

## பிரமிட்-ஆட்சேர்க்கும்...

காலை நடத்தப்பட்டது.

இதன்போது அந்த நிறுவனத்திடம் ஏற்கெனவே ஒருவருக்கு சுமார் ஒரு இலட்சத்து 30ஆயிரம் ரூபா வீதம் பணம் செலுத்தி ஏமாற்றப்பட்ட பொதுமக்கள் ஒன்று கூடி தாம் செலுத்திய பணத்தை மீளத்தருமாறு கோரினர்.

இதன் போது குறித்த பகுதி இளைஞர்களும் மக்களும் ஒன்றுதிரண்டு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவாக மண்டப பிரதான நுழைவாயிலை மூடி பிரமிட் வியாபார நிர்வாகத்தினரை வெளியேறவிடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பிரமிட் வியாபாரம் மத்திய வங்கியால் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் எமது பகுதியில் வேறு பகுதிகளை சேர்ந்த அப்பாவி பொதுமக்களை அழைத்து வந்து ஆட்சேர்ப்பு செய்கிறார்கள். இதனை இனியும் அனுமதிக்க முடியாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவித்தனர்.

குறித்த மண்டபத்தில் பிரமிட் வியாபார நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளிமாவட்டங்களில் இருந்து அழைத்து வரப்படும் பொதுமக்களுக்கு பிரமிட் வியாபாரம் தொடர்பாக விளக்கமளிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரிடமும் 250 ரூபா பெற்ற பின்பே மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையிலேயே பிரமிட்டால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் பணத்தை கேட்டு மண்டபத்திற்குள் நுழைய முனைந்ததால் இருதரப்பிற்கிடையிலும் முறுகல்நிலை ஏற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் குறித்த பகுதியில் செய்தி சேகரித்துக்கொண்டிருந்த ஊடகவியலாளர்களையும் பிரமிட் வியாபார ஊழியர்கள் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டனர்.

மேலும் தங்களிடம் பெற்ற பணத்தை மீளத் தருவதாக கடந்த 4 வாரங்களாக ஏமாற்றுவதாகவும் இது தொடர்பாக யாரிடமும் முறையிட வேண்டாம் என பிரமிட் நிர்வாகத்தினர் கூறுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

பணம் மட்டுமில்லாமல் வெளிநாட்டு சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதாக தெரிவித்து பெற் றுக்கொண்ட கடவுச்சீட்டையும் மீளத்தரவில்லை எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததினைத் தொடர்ந்து குறித்த மண்டபத்திற்கு வருகைதந்த பொலிஸார் பிரமிட் வியாபார முகாமையாளர் உள்ளிட்டவர்களை பொலிஸ் நிலையம் அழைத்து சென்றனர்.

பொலிஸ்நிலையத்தில்வைத்து மேற்கொண்ட விசாரணைகளில் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் பணம் பெற்றுக்கொண்டது மட்டுமில்லாமல் அதற்கான பற்றுச்சீட்டும் வழங்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எதிர்வரும் புதன்கிழமை முழுத்தொகையையும் மீளளிப்பதாக தெரிவித்தனர்.

குறித்த பிரமிட் வியாபார முகாமையாளர் உள்ளிட்டவர்களை கடுமையாக எச்சரித்த பொலிஸார் பொதுமக்கள் இவ்வாறான பிரமிட் வியாபார முறைமை தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறும் தெரிவித்துள்ளனர். பிரமிட் வியாபாரம் தென்மராட்சிப் பகுதிகளில் இடம்பெற்றால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் உடனடியாக முறையிடுமாறும் தெரிவித்துள்ளனர். (மு-89)

## இடைக்கால அறிக்கை...

இணையத்தளம் மூலமும், முகநூல் பதிவுகள் மூலமும், பொதுமக்களின் கருத்துக்கள் கோரப்படவுள்ளன.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில், இவ்வாறான தொரு நடவடிக்கையை மேற்கொள்ளும முதல் நாடாக இலங்கை விளங்கும் என்றும், பிரதமர் செயலக வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதனை இணையவழி கருத்துக்கணிப்பு என்று அழைக்கும் அதிகாரிகள், நாளை மறுதினம் இடைக்கால அறிக்கை தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நிறைவடைந்த பின்னர், இந்தக் கருத்துக்களைத் திரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (மு)

## 'ஏக்கிய'வை எல்லோரும்...

இளைய தலைமுறையைப் பொறுத்தது என அம்பாந்தோட்டையில் நடைபெற்ற தேசிய சட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவித்தார்.

"இதுவரை இது தொடர்பில் என்ன நடந்தது? மற்றும் இதனைத் தொடர்வதா இல்லையா" எனப் பாராளுமன்றத்தின் கருத்துகளைப் பெறும் நோக்குடன் பாராளுமன்றத்தில் இப்போது இடைக்கால அறிக்கை தொடர்பில் விவாதிக்கப்பட்டு வருகின்றது என பிரதமர் தெரிவித்தார். "ஒரு புதிய அரசியலமைப்பு ஏன் தேவை? என மக்கள் சிலர் கேட்கின்றார்கள். போரின் பின்னர் எங்களுக்கு ஒரு அரசியல் தீர்வு தேவை. எங்களுக்குப் புதிய தேர்தல் முறைமை தேவை. நிறைவேற்று அதிகார சனாதிபதி முறைமை தொடர்பிலான விவாதம் கொண்டுவரப்படல் வேண்டும்" என பிரதமர் விளக்கமளித்தார். மத மற்றும் சிவில் சமுதாயத் தலைவர்களுடன் மேலும் கலந்துரையாடல்கள் மற்றும் ஆலோசனைகள் நடத்தப்படும் என்றும் இந்த நடைமுறை புதிய அரசியலமைப்பின் வரைவு தொடங்கும் முன்னர் வரை அதாவது பெப்ரவரி அல்லது மார்ச் வரை நடைபெறும் என்றும் பிரதமர் கூறினார்.

"சட்டபூர்வ அம்சங்களுக்கு நாங்கள் செல்லவில்லை. எல்லோரும் ஒரே ஆவணத்துடன் வெளிவர வேண்டும் என்பது வரலாற்று முக்கியமானது" என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இந்த நாட்டின் ஆட்சிமுறைமையினை விளக்குவதற்கான சரியான சிங்களப் பதம் "ஏக்கிய" என எல்லோரும் தற்போது ஒப்புக்கொண்டு விட்டார்கள் என்றும் அதனை எவரும் மறுக்கவில்லையெனவும் பிரதமர் கூறினார். ஐக்கிய இராட்சியத்திலும் அமெரிக்காவிலும் "சமஷ்டி/ கூட்டாட்சி" என்பது உச்ச சட்ட அதிகாரத்தைப் பிரிப்பது என்ற பொருளில் உள்ளது. ஆனால், ஒற்றையாட்சி அதிகாரமுள்ளதாகக் கூறப்படும் ஐக்கிய இராட்சியத்தின் நாடாளுமன்றில் ஸ்கொட்லாந்து மற்றும் வட அயர்லாந்து என்பன ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கு சாத்தியம் உண்டென கடந்த தசாப்தத்தில் தீர்மானிக்கப்பட்டது என பிரதமர் மேலும் கூறினார்.

"ஒற்றையாட்சி (Unitary) என்பது பிரிக்கப்பட முடியாமையைக் குறிக்கவில்லை. பாராளுமன்றத்தில் அதிகாரத்தைக் குவிப்பது என்ற ஒரு பொருளை மட்டுமே அது குறிக்கின்றது" என பிரதமர் சுட்டிக் காட்டினார். இருந்த போதும், சிங்களத்தில் இது இரண்டையும் குறிக்கும். எனவே ஒற்றையாட்சி (Unitary) என்பது சரியான பதமாக இருக்குமா? என்பது தான் விவாதிக்கப்பட வேண்டியதாக உள்ளது. "ஏக்கிய" என்ற வலுவான வார்த்தையை உருவாக்கினோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்மொழியப்பட்ட வரைபுகளை எடுத்து நோக்கினேன். அதில் "ஏக்கிய" என்ற சொல்லே மூன்று மொழிகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது என பிரதமர் மேலும் தெரிவித்தார்.

மதம் சம்பந்தமாக அனைத்து மதத் தலைவர்கள்-மகாநாயக்கர்கள், கார்டினல்கள், ஆயர்கள் மற்றும் பிற மதகுருமார்கள்-ஆகியோரைக் கேட்டுக் கொள்வது சிறந்தது என்று அவர் கூறினார். "இது ஒரு அரசியல் நடைமுறை மட்டுமே. இறுதியாக, ஒரு வாக்கெடுப்பு இருக்கும் என்று நான் நம்புகிறேன். அதில் முடிவுசெய்ய வேண்டியது இளைய தலைமுறையினரைப் பொறுத்தது ஆகிறது. இது ஒருமித்த கருத்தை உருவாக்கும் அரசியல் வழிமுறையின் தொடக்கமாகும்" என பிரதமர் மேலும் தெரிவித்தார். (மு)

## வட-கிழக்கில்...

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துள்ள நிலையில், வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பொது அணி ஒன்றை நிறுத்தி உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என பொது அமைப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன.

கடந்த உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சிச் சபைகள் இயங்கு நிலையின்றி வீணே காலத்தைக் கழித்தன. இதனால் உள்ளூராட்சி சபைகள் ஆற்ற வேண்டிய சேவைகளைப் பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது.

எனவே இம்முறையும் அதே தவறு ஏற்படாதவாறு பிரதேச உள்ளூராட்சி சபைகளை உச்சப் பயன்பாடு உடையதாக மாற்ற வேண்டும். இதற்காக மக்கட் சேவையாளர்கள், சிறந்த நிர்வாகிகள், பொதுச் சொத்துக்கு ஆசைப்படாதவர்களை தேர்தலில் முன்னிறுத்தி அவர்களை வெற்றியடையச் செய்ய வேண்டும் எனவும் இவற்றுக்காக பொது அணி ஒன்றை நிறுத்துவதே ஒரே வழி எனவும் பொது அமைப்புகள் கருத்து வெளியிட்டுள்ளன.

இதேவேளை தேர்தலில் நிறுத்தப்படும் பொது அணி என்பதில் பொது அமைப்புகள் முதன்மை படுத்தப்படுவதுடன் அரசியல் கட்சிகளுக்கும் இடம்கொடுக்கப்படுவதான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும்,

உள்ளூராட்சி சபைக்கான வேட்பாளர்களை பொதுமக்களின் பங்களிப்போடு தெரிவு செய்ய வேண்டும் எனவும் பொது அமைப்புகள் கருதுகின்றன. இது இவ்வாறு இருக்க மிக விரைவில் பொது அணி பற்றிய விபரம் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

## பிரபாகரனின் ஆட்சியை...

வைகோ தெரிவித்துள்ளார். ஈழம் 87 என்ற புத்தக வெளியீட்டு விழா நேற்றுமுன் தினம் சென்னையில் நடைபெற்றது. அதில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசுவாமி. எம்.ஜி.ஆர். மற்றும் இந்திரா காந்தி ஆகியோர் இருந்திருந்தால் ஈழம் அமைந்திருப்பது உறுதி.

ஈழத்து தலைவர் பிரபாகரன் உதவி என்று கேட்டு வந்தபோது முதலில் உணவருந்த கொடுத்த எம்.ஜி.ஆர் பின்னர் அவர்கள் கேட்ட தொகையில் இரு மடங்காக 4 கோடி ரூபாயை கொடுத்து உதவி செய்திருந்தார். இவ்வாறு ஏராளமான உதவிகளை விடுதலைப் புலிகளுக்கு நடிகர் எம்.ஜி.ஆர் செய்திருந்தார்.

ஆனால் அதன் பின்னரான இந்திய அரசாங்கமே நீதியான ஈழத்து கனவை அழித்தது என வைகோ மேலும் தெரிவித்துள்ளார். (மு)

## கண்ணீர் அஞ்சலி



ஊடகவியலாளர்

**வே.தவச்செல்வம்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.முத்தையா வேலுப்பிள்ளை**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வலம்புரி நண்பர்கள்** (இ)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

**தொடர்பு: 077 328 2051** (1231)

## காணி விற்பனைக்கு

இராமநாதன் றோட், நாச்சிமார் கோவிலடி, ராஜா கிறீம் ஹவுஸுக்கு அருகாமையில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.


(1222) **தொடர்பு: 0770870358**

## கடை வாடகைக்குத் தேவை

கடை வாடகைக்கு தேவை. கொக்குவில், ஆனைக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் விரும்பத்தக்கது.

**தொடர்பு : 077 623 7956** (C-299)

# காணிக்கை



அமரர் உயர்திரு.
**தி.இராசநாயகம்**
(தலைவர், மகாதேவா சிறுவர் இல்லம்)
நின்பெரும் அரும்பணியும்
நீர் கூறிய அறிவுரையும்
நினைவில் நீள்கிறது

**அறிவுநதி புத்தகசாலை**
கிளிநொச்சி. (C-295)

## முல்லை...

வாசலுக்கு வருகை தந்து தங்கியிருந்த யாத்திரிகர்களின் பணத்தையும் திருடி சென்றுள்ளனர்

குறித்த திருட்டு சம்பவத்தை நடத்திய வர்களது நடவடிக்கைகள் சில அருகிலுள்ள உணவகத்தின் cctv கமராவில் பதிவாகியுள்ளது.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாரும விசேட குற்றத் தடுப்பு பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு)

# மரண அறிவித்தல்

## இராசையா தளையசிங்கம்



யாழ்ப்பாணம் வருணன் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தளையசிங்கம் 05.11.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற இராசையா - அன்னபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - இரத்தினம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற சந்திரலீலாவின் அன்புக்கணவரும், தவலீலா (கனடா), தவசேகர் (விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூரியகுமார் (கனடா), தக்சாயினி (ஆசிரியை - யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், கேசிகன், ஐக்கியா ஆகியோரின் பேரனும், பொன்னம்மா, அமரர் யோகநாதன், தனபாலசிங்கம், தர்மகுலராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று நவாலி வழுக்கையாறு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
0015143576744 தகவல் : மகள் (தவலீலா).
0773222768 மகன் (தவசேகர்) (C-300)

# ஆச்சார்ய அபிஷேக அழைப்பு



அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருஷம் ஐப்பசி 20ம் நாள் (06.11.2017) திங்கட்கிழமை துதியை திதியும் ரோகினி நட்சத்திரமும் அமிர்த்த சித்த யோகமும் கூடிய சுப முகூர்த்தத்தில் முற்பகல் 9.40 முதல் 10.35 வரையிலான சுப வேளையில்

யாழ். வண் வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய பிரதமகுரு

அமரர் நா.பாலசுப்பிரமணியக்குருக்கள் கௌரீஸ்வரி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வன்

**பிரம்மஸ்ரீ**
**நா.பா.பாலகணேச சர்மா**
**அவர்களுக்கு**

மேற்படி ஆலய மண்டபத்தில் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா.மகாதேவ சிவாச்சார்யர் ஆசியுடன் சமய, விசேட, நிர்வாண தீட்ஷைகளும் சிவாச்சார்ய அபிஷேகமும் (குருப்பட்டம்) நிகழ விநாயகப் பெருமானின் திருவருளும் குருவருளும் கைகூடியுள்ளது. இவ் விழாவில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

தீட்ஷாகுரு - சிவஸ்ரீ மு.ரவிபாஸ்கர சிவாச்சார்யார் (நீராவியடி)
சர்வ சாதகர் - அருள்ஜோதி ஸ்கந்தசாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சார்யார் (நாயன்மார்கட்டு)
பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம் - இணுவில்)
பிரம்மஸ்ரீ சு.நவநீதகிருஷ்ண சர்மா (நீராவியடி) (C-301)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

48, 2வது ஒழுங்கை, பிறவுண் வீதி, நீராவியடி.
அமரர் சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக்குருக்கள் கௌரீஸ்வரி குடும்பத்தினர். 021 222 1123

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

அமெரிக்க லொத்தர் விசா (Green Card) முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

**அண்ணா பொதிகள் சேவை**
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500 (C-288)

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பதக்கம், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-221)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

**V2 TRAVELS-0768226240**
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**அமெரிக்க லொத்தர் விசா**

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

இன்னும் ஓரிரு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.

**0768226243**

பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச வீசா வாய்ப்புக்கள் இருக்காது.ஆகவே இப்போதே முந்துங்கள்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம்.கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



வே.கமலேந்திரன் -குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

**V2 TRAVELS**

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, ... | 10,பேருந்து நிலையம் | முடக்காடு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு. பாதுகாப்பு. நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

(C-287)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
1, பிறவுண் வீதி, நாவலர் வீதி, சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.